பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | தை 26 | திங்கட்கிழமை | 10.02.2020 | கதிர் 96

**இனி இது இரகசியம் அல்ல!**

புதுடில்லிசென்றிருக்கும் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு நாட்டுத் தலைவருக்கான முழு அளவிலான வரவேற்பு மரியாதையை ஏற்பாடு செய்திருந்தார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

ஆனாலும், பக்கம் 02

### நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

# விக்கி தலைமையில் மாற்று அணி உதயம்

### அனந்தி, சுரேஷ், சிறிகாந்தா தரப்புகள் பங்கேற்பு



யாழ்ப்பாணம், பெப். 10

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் தலைமையில் 'தமிழ் மக்கள் தேசிய கூட்டணி' என்ற புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் கைச்சாத்திடப்பட்டது. பக்கம் 03

## ஐக்கியம் பேசுபவர்கள் எம்முடன் இணையலாம்

### சுரேஷ் அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.10

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாற்றுத் தலைமையானது தமிழ் மக்களுக்குச் சரியான பாதையை வகுத்துக் கொடுக்கும். நாம் சரியான பாதையில் பயணித்து தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்போம் எனத் தெரிவித்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன், வெளியில் பக்கம் 03

## எம்மை ஆதரியுங்கள்! கோருகிறார் அனந்தி

யாழ்ப்பாணம்,பெப்.10

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வடக்கு-கிழக்கு மக்கள் சார்ந்த நலனில் அக்கறையுடன் சரியான பாதையில் பயணிக்கும் எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் எமக்கான முழு ஆதரவை மக்கள் எமக்குத் தரவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு பக்கம் 03

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; பெரும் சிக்கலில் மைத்திரி

கொழும்பு,பெப்.10

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலைத் தடுக்கத் தவறினார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த சில மாதங்களாகச் சிறையிலிருந்த பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமஸ்ரீ பெர்னாண்டோ ஆகியோர் பிணையில் விடுலையாகியுள்ள நிலையில், குண்டுத் தாக்குதல் தொடர்பான விசேட ஆவணங்கள் சிலவற்றை வெளியிட அவர்கள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுத்தாக்குதல் தொடர்பில் பக்கம் 03

## தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சுமந்திரனின் பிறந்தநாள் பரிசு!

### கூறுகின்றார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், பெப். 10

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உருவாக்கப்பட்டதை எம்.ஏ.சுமந்திரனின் பிறந்தநாள்பரிசாக வழங்க விரும்புகிறோம் எனத் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், இந்தப் பக்கம் 03

## ஓட்டோ – சைக்கிள் விபத்து திருமலையில் இளைஞர் பலி;

திருகோணமலை-சாம்பல்தீவு பகுதியில், ஓட்டோவும் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், சைக்கிளில் சென்ற இளைஞன் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி, நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

சல்லி - சாம்பல்தீவு பகுதியைச் பக்கம் 03

## அடிப்படை நியமங்களே பின்பற்றப்படாமல் யாழ்.பல்கலை பேரவைக்கு உறுப்பினர்கள்

### ஆணைக்குழுத் தலைவருக்கு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ். பல்கலைக்கழகத்தின் ஆட்சி அதிகார சபையாகிய பேரவைக்கு அண்மையில் இடம்பெற்ற வெளிவாரி உறுப்பினர்களின் தெரிவில் அடிப்படை நியமங்களே பின்பற்றப்படவில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தத் தெரிவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்பட்ட சிலர் இடம்பெற்றுள்ளமையும், அவர்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை எனவும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அது தொடர்பில் ஜனாதிபதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலை பக்கம் 03

## முந்தலில் வான் விபத்தில் ஒருவர் பலி;7 பேர் காயம்



முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கீரியங்கள்ளி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்; மேலும் ஏழு பேர் காயமடைந்தனர்.

முந்தல் கீரியங்கள்ளிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார் என முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண்டிகம பகுதியில் இருந்து கீரியங்கள்ளி பகுதியை நோக்கிப் பயணித்த சொகுசு பக்கம் 03

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு வயதெல்லை 45ஆக உயர்வு

கொழும்பு, பெப். 10

தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை 45ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்னர் இந்த வயதெல்லை 35 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அதிக வயதையுடைய பட்டதாரிகள் மற்றும் மக்கள் அமைப்புகளின் கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு இந்த வயதெல்லையை அதிகரிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். பக்கம் 03

## மற்றொரு மாணவனுக்கும் தடை

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் பகிடிவதையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாகிய மற்றொரு சிரேஷ்ட மாணவருக்கும் மறு அறிவித்தல் வரை, பல்கலைக்கழக கற்கைநெறிகளில் ஈடுபடவோ, வளாகங்களுக்குள் நுழையவோ முடியாதவாறு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் முதுநிலை மாணவர்கள் சிலர், புதுமுக மாணவிகள் சிலர் மீது பகிடிவதையில் ஈடுபட்டனர் எனப் பல்கலைக்கழக நிர்வாகத்துக்குக் கிடைத்த தகவலையடுத்து முன் பக்கம் 03

## இந்தியப் பயணத்தில் பிரசன்ன ரணவீர; சமூக ஊடகங்களில் கடும் விமர்சனம்!

கொழும்பு, பெப். 10

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு அழைத்துச் சென்றுள்ள குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர இடம்பெற்றிருப்பது சமூக வலைத்தளங்களில் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

மஹிந்த தலைமையிலான 52 நாள் அரசின் காலத்தில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமளியின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மிளகாய்த்தூள் கலந்த தண்ணீரை வீசித் தாக்குதல் நடத்தியிருந்தார் பிரசன்ன பக்கம் 03



# என்னதான் குத்துக் கரணம் போட்டாலும் தனித்து ஆட்சியை அமைக்கவேமுடியாது!

## ஆளும் தரப்புக்கு சவால் விடுகிறார் ரிஷாத் பதியுதீன்

முசலி,பெப்.10

பேரினவாத சிந்தனை கொண்டவர்கள் என்னதான் குத்துக்கரணம் போட்டாலும் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் ஆதரவின்றி, தனித்து ஆட்சியமைக்க முடியாதென்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

முசலி, புதுவெளியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன்அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

சிறுபான்மை கட்சிகளின் துணையின்றி நாம் ஆட்சி அமைப்போம் என வீராப்புப் பேசிக்கொண்டிருக்கும் சில அரசியல்வாதிகள், பொதுத்தேர்தலின் பின்னர் தமது அறியாமையை புரிந்து கொள்வர். அவர்களின் உள்ளத்தில் நிறைந்து கிடக்கும் இனவாத மற்றும் மதவாத சிந்தனைகளின் வெளிப்பாடாகவே இந்த ஆசையை வெளிப்படுத்துகின்றனர்.

ஆனால், ஒருபோதும் இது நிறைவேறாது. ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை மக்களை உசுப்பேற்றி வாக்குகளை பெற்றதைப் போன்று, இந்தத் தேர்தலில் அவர்கள் நினைத்தமாத்திரம் வாக்குகளைப் பெறமுடியாது.

இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள், தமது இருப்புக்காக நடத்தும் போராட்டங்களை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். ஆண்டாண்டு காலமாக அங்கு வாழ்ந்துவரும் முஸ்லிம் சமூகம், அரசியல் ரீதியில் பலமிழந்ததனாலேயே இன்று நசுக்கப்படுகின்றனர். அதேபோன்ற பாணியிலேயே தற்போது இங்கும் சதிகள் அரங்கேறி வருகின்றன.

இரண்டு மாதகாலத்தில் இந்த இடைக்கால - சிறுபான்மை அரசில், சிறுபான்மை சமூகத்துக்கு நடந்தேறிவரும் சம்பவங்கள் நமக்கு எதிர்காலத்தை வெளிச்சம் போட்டுக்காட்டத் தொடங்கியுள்ளன.

பொதுத்தேர்தலின் பின்னர், இவர்கள் தனியே நின்று ஆட்சியமைத்துக் கொண்டால் நிலைமை என்னவாகும்? நமது சமூகம் அனுபவிக்கும் விசேட உரிமைகள் மற்றும் சலுகைகளை, புதிய சட்டங்களைக் கொண்டுவந்து நசுக்குவதற்கான பிரேரணைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர். சிறிய கட்சிகள், சிறுபான்மைக் கட்சிகள் நாடாளுமன்றில் பிரதிநிதித்துவம் பெறும்வகையில், தலைவர் அஷ்ரப்பினால் தூரநோக்குடன் பெற்றுக்கொடுக்கப்பட்ட 5% சதவீத வெட்டுப்புள்ளியை, 12%சதவீதமாக மாற்றுவதற்கான சதி இடம்பெறுகிறது.

அதன்மூலம், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கும் தாம் நினைத்தமாத்திரத்தில், சட்டமூலங்களை சட்டங்களாக நிறைவேற்றுவதற்கு ஆமாம்சாமி போடுபவர்களைக் கொண்டு வருவதற்கும் முனைப்புக் காட்டுகின்றனர்.

சிறுபான்மைச் சமூகத்துக்கு கடந்த காலங்களில் கஷ்டங்களும் பிரச்சினைகளும் வரும்போதுகளத்தில் நின்றவர்கள் யார்? காடையர்களால் பக்கம் 03 ❯❯❯

# போதைப் பொருள் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அக்கராயன் பிரதேசத்தில் கவனயீர்ப்புப் போராட்டம்

கிளிநொச்சி - அக்கராயன் பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் ஏற்பாட்டில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுப்பட்டது.

பிரதேசத்தில் சவாலாக விளங்கும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப் படுத்தக் கோரிய மகஜர் மதத் தலைவர்கள் மற்றும் பொலிஸாருக்குப் போராட்டக் காரர்களால் கையளிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் காணப்படும் அதிகரித்த போதைப்பொருள் பாவனை காரணமாக குடும்பங்களுக்குள் நிம்மதியற்ற நிலை காணப்படுவதாகவும், குடும்ப வன்முறைகள் இடம்பெறுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், பாடசாலை செல்லும் வயதை உடைய மாணவர்கள் இந்தப் பழக்கத்திற்கு ஆளாகின்றனர் எனவும் கல்வி கற்கும் வயதில் குடும்ப நிலை காரணமாக தொழில்களுக்குச் செல்ல வேண்டிய நிலை சிறுவர்கள் மத்தியில் காணப் படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கு மான பணியகத்தின் இணை பணிப்பாளர் அருட்தந்தை ரமேஸ் தெரிவிக்கையில் - போதைப்பொருள் பாவனையினால் மக்கள் மத்தியில் இன்று சமாதானமற்ற நிலை காணப்படுகின்றது. இதனால் வாள் வெட்டுக்கள், வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. இவற்றைக் கட்டுப் படுத்துவதற்காகவும், இப்பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை தொடர்பாக விழிப்பினை ஏற்படுத்தும் வகையிலும் இவ்வாறான போராட்டத்தினை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

இவ்வாறான நிலையை உணர்ந்து, போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபட்டு, நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பி, சமாதானமானச் சூழலை நிலைநாட்ட அனைவரும் ஒன்றுசேர வேண்டும் - என்றார்.





# கட்டுநாயக்க விமான நிலையத்தில் சேவையாற்றும் யுவதி கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் அனுமதி

## 'அ'புர ஆஸ்பத்திரியிலிருந்து அங்கொடைக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு,பெப்.10

இலங்கையில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான சீனப் பெண், வைரஸ் தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்துவிட்டார் என அவருக்குச் சிகிச்சையளித்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அப்பெண்ணின் உயிரியல் மாதிரிகள் மேலதிக உறுதிபடுத்தலுக்காக ஹொங்கொங்கில் உள்ள இரசாயனமற்றும்மருத்துவஆய்வுகூடமொன்றுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

மேற்படி உயிரியல் மாதிரிகளின் ஹொங்கொங் பரிசோதனை அறிக்கை கிடைக்கும்வரை அந்தச்சீனப் பெண்ணை அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் வைத்து கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே கட்டுநாயக்க விமான நிலையத்தில்சேவையாற்றும்யுவதியொருவர் கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் அனுராதபுரம் போதன அவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அங்கொடை தொற்று நோய்த் தடுப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தில் சேவையாற்றும் அனுராதபுரம், ஹிதோகம பகுதியைச் சேர்ந்த 23 வயது யுவதி ஒருவரே இவ்வாறு அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தற்போது அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலை உட்பட நாடளாவிய ரீதியில் 17 பேர் கொரோனா தொற்றுக் குறித்த சந்தேகத்தில் சிகிச்சைப் பெறுகின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

# ஐஸ்,கஞ்சாவுடன் ஒருவர் வாழைச்சேனையில் கைது

மட்டக்களப்பு - வாழைச்சேனைப் பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருள் மற்றும் கஞ்சா விற்பனை செய்யும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரிடம் இருந்து 50 கிராம் கேரளா கஞ்சா மற்றும் 20 கிராமும் 75 மில் லிக்கிராமும் உடைய ஐஸ் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மாவட்ட புலனாய்வு பிரிவினர் கஞ்சா வியாபாரியின் வீட்டைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இதன்போது, மறைத்து வைக்கப் பட்டிருந்த மேற்படி போதைப் பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றியம் சியோடு வியாபாரியையும் கைது செய்துள்ளனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வரவேற்புக்கு இடையிலும் தாம் சொல்ல வேண்டிய விடயங்களைச் சொல்லிலும் செயலிலும் செய்து காட்ட அவர் இம்முறையும் தவறவில்லை.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டபாய ராஜபக்ஷ, பதவியேற்றுப் பத்து நாள்களில் புதுடில்லி சென்றார். அவரை வரவேற்ற இந்திய பிரதமர், அந்த வரவேற்புப் பற்றிய தமது மன நிறைவான செய்தியை விசேடமாகத் தமிழில் 'ட்வீட்' செய்து அசத்தினார். அதன் மூலம் தமிழர் பால் தமக்குள்ள கரிசனையை அவர் கோடிட்டுக் காட்டினார்.

இப்போது இங்கு தனது நாட்டின் தேசிய சுதந்திரதின விழாவைக் கொண்டாடிய கையோடு இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லி சென்றிருக்கின்றார்.

வழக்கமாக இங்கு சுதந்திரதின விழாவில் தமிழிலும் இசைக்கப்படும் தேசிய கீதம், புதிய ஜனாதிபதி, புதிய அரசின் கீழ் வேண்டுமென்றே நிறுத்தப்பட்டது.

தமிழர்களின் நெஞ்சை நெருடும் ஓர் அபத்த நடவடிக்கையாகவே பல சர்வதேச தரப்புகளாலும் இது நோக்கப்பட்டது.

புதுடில்லித் தரப்பினரும் பிரதமர் மோடியும் இதற்கு விதிவிலக்கல்லர்.

அது தொடர்பில் தனது மனவுணர்வை தற்போதைய புதுடில்லிச் சந்திப்பின் போது பகிரங்கமாகவே - அதேநேரம் நாசூக்காக - மஹிந்தருக்குக் குறிப்பால் உணர்த்தினார் பிரதமர் மோடி.

சந்திப்பின் பின்னர் இரண்டு பிரதமர்களும் சந்திப்புக் குறித்து ஊடகங்களுக்கும் கூடியிருந்தோருக்கும் தகவல் கூறுவதற்காகத் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட - மைக் பொருத்தப்பட்ட - மேடை ஸ்டாண்ட் டுக்கு அருகே வந்தனர்.

உரையைத் தொடங்க வேண்டியவர் பிரதமர் மோடி. தொடங்கினார்.

முதலில் இலங்கையில் இருந்து வந்திருந்த பிரதமர் மஹிந்தவைப் பார்த்து அவரது மொழியில் (சிங்களத்தில்) *'ஆயுபோவான்'* என்று வரவேற்றார் மோடி. அடுத்துத் தமிழில் *'வணக்கம்'* என்றார். தொடர்ந்து தமது நாட்டின் ஹிந்தி மொழியில் *'நமஸ்தே'* என்றார் அவர்.

பிரதமர் மஹிந்தவின் முகத்தில் ஈயாடவில்லை.

*"நீங்கள் உங்கள் நாட்டின், உங்களின் சகோதர இனமான தமிழர்களை, அவர்களது மொழியில் தேசிய கீதம் பாடாமல் தடுத்தீர்கள். ஆனால் நாங்கள் அவர்களைக் கைவிடவில்லை. அவர்கள் எமது நெஞ்சுக்குள் இருக்கின்றார்கள். அதனால்தான் எனது மொழியில் உங்களை விளித்து வணக்கம் கூறமுன்னர், எமது சகோதர மொழியான தமிழில் வணக்கம் கூறினேன்"* என்று சொல்லாமல் குறிப்பால் உணர்த்தினார் மோடி.

அவரின் இந்த மொழிக் கையாள்கை மூலமான செய்தி பிரதமர் மஹிந்தருக்குப் புரிந்திருக்குமோ என்று மனதுக்குள் நினைத்தேன்.

எனது தென்னிலங்கை ஊடக நண்பர் ஒருவரிடமும் கேட்டேன்.

*"எங்களுக்கே வெளிப்படையாக அது புரிந்தது. வெட்கமாகவும் இருந்தது. அது நிச்சயம் மஹிந்தருக்கு - இத்தகைய விடயங்களை நன்கு புரிந்து கொள்ளக் கூடிய அரசியல் பக்குவம் கொண்ட அவருக்கு - புரிந்திருக்கும்."* - என்றார் என் தென்னிலங்கை நண்பர்.

புரிந்தால் நல்லதுதானே...!

★ ★ ★

மஹிந்தவின் புதுடில்லி விசிட்டில் இன்னொரு கூத்தும் அரங்கேறியது.

மஹிந்தர் தனது பரிவாரப் பட்டாளத்தில் தமது அரசுத் தரப்பு எம்.பியான பிரசன்ன ரணவீரவையும் அழைத்துச் சென்றிருந்தார்.

மஹிந்தவின் கடந்த 52 நாள் ஆட்சி அமளியின் போது நாடாளுமன்றத்தில் அவரது அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த சமயத்தில் நாடாளுமன்றத்தில் குழப்பம் ஏற்பட்டதல்லவா? அப்போது ஐ.தே. முன்னணி எம்.பிக்கள் மீது சபைக்குள் மிளகாய்த் தூள் கலந்த தண்ணீரை வீசி 'நாடாளுமன்றச் சம்பிரதாயத்தை' மேன்மையுற வைத்தவர் இவர்தான்.

அவருக்கு இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி,சஞ்சய் காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி எல்லாம் யார் என்று தெரியவில்லை. அவ்வளவு தூரம் இந்தியாவைப் பற்றிய அறிவு அந்த இலங்கை எம்.பிக்கு.

புதுடில்லியில் மகாத்மா காந்தியின் நினைவு நிகழ்வின் போது ராகுல் காந்தியைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கின்றது.

பார்த்தார், மகாத்மா காந்தி வயதானவராக இருக்கின்றார். இவர் ராகுல் காந்தி இளைஞர். அவரும் காந்தி, இவரும் காந்தி.

பிறகென்ன? தமது முகப்புத்தகத்தில் *"மகாத்மா காந்தியின் நினைவு நாளில் அவரின் பேரனான ராகுல் காந்தியை சந்தித்தேன்"* - என்று பதிவிட்டாராம்.

நல்ல அறிவுஜீவியைத்தான் மஹிந்தர் தன்னுடன் புதுடில்லிக்குக் கூட்டிக் போய் இருக்கின்றார். வாழ்க இலங்கை அரசியல்வாதிகளின் பேரறிவு...!

-மின்னல்-

## மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நெடுக்கப்படும் ஒழுக்காற்றுக் குழு விசாரணைகளின் அடிப்படையிலேயே இரண்டாவது மாணவருக்கும் உள்நுழைவதற்கான தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீதான ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாகவும் விசாரணைகளில் தலையீடுகளைத் தவிர்ப்பதற்காகவுமே, பல்கலைக்கழக எல்லைக்குள் நுழைவதற்கான (Out of Bounds) இடைக்காலத் தடை விதிக்கப்படுவதாக, யாழ்.பல்கலைக் கழக நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், பகிடிவதை தொடர்பில் சான்றாதாரங்கள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் மேலும் சில மாணவர்களுக்கு உள்நுழைவதற்கான தடை விதிக்கப்படும் என்றும், பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## பட்டதாரிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொழிலை எதிர்பார்த்துள்ளவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முதலாவது பட்டப் படிப்பொன்றை அல்லது அதற்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறி ஒன்றினை 2019.12.31ஆம் திகதி பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்பிக்கின்ற பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் 2020.01.01 ஆம் திகதிக்கு பட்டம் பெற்று ஒரு வருடத்திற்கும் அதிக காலம் தொழிலின்றி இருப்பதாகவும் கிராமசேவகர் மற்றும் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தவேண்டும்.

விண்ணப்பங்களை உரிய முறையில் நிறைவுசெய்து பட்டச் சான்றிதழ் அல்லது டிப்ளோமா சான்றிதழ் மற்றும் பெறுபேறு ஆவணத்தின் புகைப்படப் பிரதி ஒன்று (மூலப் பிரதியுடன் ஒத்திருப்பதை சமாதான நீதவான் ஒருவர் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் உண்மையான பிரதி என்பதை உறுதிப்படுத்தி 2020.02.20ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தபால் திணைக்களத்தின் ஸ்பீட் போஸ்ட் கூரியர் சேவையின் ஊடாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

விண்ணப்பங்களை ஜனாதிபதி அலுவலகத்தின் http://www.presidentsoffice.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகள் டிப்ளோமாதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்2020, நிறுவன முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு, ஜனாதிபதி அலுவலகம், காலி முகத்திடல், கொழும்பு – 01 என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் பட்டதாரியாயின் பட்டதாரி/(மாவட்டத்தின் பெயர்) என்றும் டிப்ளோமாதாரி/(மாவட்டத்தின் பெயர்) என்றும் குறிப்பிடப்படுதல் வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் – என்றுள்ளது. (ஐ)

## என்னதான்...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி) கடைகளும் சொத்துக்களும் தீக்கிரையாக்கப்பட்டு, பேரழிவும் உயிர்பலியும் இடம்பெற்றபோது, அரசாங்கத்தையும் பாதுகாப்புப் படையையும் தட்டிக்கேட்டவர்கள யார்? காடைத்தனத்தை தொடரவிடாமல் தடுத்து நிறுத்தியவர்கள் யார்?

பேரினவாதத்துக்கு சுஜாதுக்கும் நமது சமூகத்தைச் சேர்ந்த முகவர்களும் ஏஜெண்டுகளும், எப்போதாவது கண்டி, திகன, அழுத்கம, கின்தொட்டைக்குச் சென்று களத்தில் நின்றிருக்கின்றார்களா? அற்பசொற்ப சுயலாபங்களுக்காக சமூகபலத்தை பிரிக்கத் துணைபோகும் இந்த முகவர்கள், அப்போது எங்கே போனார்கள்? – என்று கேள்வியெழுப்பினார் அவர்.

## ஐக்கியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இருந்து ஐக்கியம் பேசுகின்ற யாரும் எம்முடன் இணைந்து பயணிக்கலாம் என அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ் மக்களின் இன விடுதலைக்காகப் பல தரப்புக்கள் போராடியுள்ளனர். தங்களின் உயிர்களைப் பொருட்படுத்தாது போராடிய அனைவரையும் எமது கூட்டணியில் இணையுமாறு இந்தச் சாந்தர்ப்பத்திலே அழைப்பு விடுக்கின்றேன். எமது கூட்டணி அமைக்கப்பட்டதன் நோக்கம் தமிழ் மக்கள் இத்தனை ஆண்டுகளாக கோரி வந்த இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வு கிடைக்க வேண்டும்.

எனவே தற்போது எமக்கு எங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும், தமிழரின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும் ஆகிய அடிப்படையான விடயங்கள் குறித்து முக்கிய கவனம் செலுத்தவேண்டும். எமதுகட்சிக்கு என்று நாற்பது ஆண்டுகால வரலாறு உள்ளது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் நாம் நடாளுமன்ற ஜனநாயக முறைமையை ஏற்று செயற்பட்டிருக்கின்றோம். அதற்கு முன்னர் ஆயுதப் போராட்டம் நடத்தியிருக்கின்றோம்.

நாம்பலதரப்புக்கள்இணைந்து புதிய கூட்டணி அமைத்து இருக்கின்றோம். ஆகவே வெளியில் இருந்து ஐக்கியம் பேசுகின்ற யாரும் எம்முடன் இணைந்து பயணிக்கலாம். தமிழ் மக்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க மிகப்பெரிய போராட்டங்களை செய்திருக்கின்றோம். பாரிய அழிவுகளை சந்தித்திருக்கின்றோம். எமது உரிமைக்காக அனைத்தையும் இழந்துள்ளோம். இழக்கக்கூடாத பல இழப்புக்களைச் சந்தித்துள்ளோம்.

ஆகவே வெளியில் நின்று வெறுமனே ஐக்கியத்தைப் பேசுவதை விட, நாங்கள் ஒன்றாக சேர்ந்து செயற்பட வேண்டும். சிங்கள, பௌத்த அரசு எதுவாக இருந்தாலும் அவர்களைப் பாதுகாப்பதை விடுத்து, இன்று இருக்கக் கூடிய அகப் புறச் சூழ்நிலைகள் அனைத்தையும் கவனத்தில் எடுத்து நாம் எவ்வாறு செயற்பட வேண்டும், அதன் ஊடாக தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என நாம்ப்சிந்திக்க வேண்டும்.

அதற்காக நாம் இது தொடர்பில் அனைத்துத் தரப்புகளும் இணைந்து இது தொடர்பில் விவாதித்து, நாம் ஆக்கபூர்வமாகச் செயற்படுவோம். தற்போது உருவாக்கப்பட்டுள்ள மாற்றுத் தலைமையானது தமிழ் மக்களுக்குச்சரியான பாதையை வகுத்துகொடுக்கும். நாம்சரியான பாதையில் பயணித்துத் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்போம்–என்றார். (ஐ–07)

## எம்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழ்ப்பணத்தில் உள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் பெரும்பான்மை இனம் என்ற சிங்கள தேசத்தால் தமிழ் மக்களாகிய நாம் எமது உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றோம். எமது மக்களின் இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் முப்பது ஆண்டுகள் நடைபெற்றது.

எனினும் எமது போராட்டம் சர்வதேசத்தின் உதவியுடன் கடந்த 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டது. அவ்வாறு மௌனிக்கப்பட்டபோது போர்க்கைதியாக எனது கணவனை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்த பெண்ணாகவும் நடைபெற்ற இன அழிப்புக்கு ஓர் சாட்சியாகவும் வாழ்ந்து வருகின்றேன்.அந்த சூழ்நிலையில் அரசியலுக்குள் நுழைந்துள்ளேன். பல கசப்பான அனுபவங்களுடன் பெண் தலைமைத்துவக் குடும்பமாக நான் அனுபவித்து வருகின்றேன். இதன் ஊடாகஎன்னைப்போன்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எவ்வாறான கஷ்டங்களை அனுபவித்து வருகின்றன என்பதை நேரடியாக உணர்ந்தவளாக இருந்து வருகின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு வழங்கிய ஆணையை மீறிச் செயற்பட்டு வருகின்றது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நான் உட்பட பலர்திலிருந்து வெளியேறி இருக்கின்றோம். நாம் இன்று மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்கியுள்ளோம். இந்த கூட்டணி வடக்கு–கிழக்கு மக்கள் சார்ந்த நலனில் அக்கறையுடன் சரியான பாதையில் பயணிக்கும். எமக்கான முழு ஆதரவினை மக்கள் எமக்குத் தர வேண்டும்–என்றார். (ஐ–07)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பரிசைப் பெற்ற பின்னராவது தன்னை திருத்திக் கொண்டு நடந்து கொள்வார் எனத் தாம் எதிர்பார்க்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்ட அவர், அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்மக்களுக்கான மாற்றுத் தலைமையை உருவாக்கும் நோக்கில் நாம் கடந்த காலம் தொடக்கம் பல முயற்சிகளை எடுத்து வந்தோம் அந்த முயற்சி இன்று வெற்றி அளித்து உள்ளது. நான்கு கட்சிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி உதயமாகிய இன்றைய தினத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது பிறந்த தினத்தை கொண்டாடுகிறார். அவருடைய பிறந்த தினத்துக்கான பரிசாக எமது கூட்டணி உருவாக்கத்தை வழங்குகின்றோம்.

இந்தப் பரிசைப் பெற்ற பின்னராவது சுமந்திரன் தன்னைத் திருத்திக் கொண்டு தமிழ் மக்களுக்காக பயணிப்பார் என எதிர்பார்க்கின்றோம். மேலும் எமது கூட்டணியில் தேசியக் கொள்கையில் இருந்து விலகாத எவரும் எம்முடன் இணைந்து பயணிக்கலாம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்– என்றார். (ஐ–07)

## முந்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வான் ஒன்று கீரியங்கள்ளி பகுதியில் பாலம் ஒன்றில் மோதி வீதியில் கவிழ்ந்ததில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அந்த வானில் பயணம் செய்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார், மேலும் 7 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த நபர்கள் சிலாபம் வைத்தியசாலையில் அனுப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் இருவர் கவலைக்கிடமாக உள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்துடன் தொடர்புடைய வான் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முந்தல் பொலிஸார் விபத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சேர்ந்த விஜயானந்தன் யெசுதன் (26 வயது) எனபவரே, உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அதேவேளை, அதே இடத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான சித்திரவேல் கேதீஸன் (25 வயது), படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம், திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. விபத்துத் தொடர்பில் நிலாவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்தியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரணவீர.

இவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ராகுல் காந்தி ஆகியோருடனான சந்திப்புகளில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பங்கேற்றிருந்தார்.

இது தொடர்பாக தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ள பிரசன்ன ரணவீர, மகாத்மா காந்தி நினைவு நிகழ்வில் காந்தியின் பேரனான ராகுல் காந்தியை சந்தித்தார் எனக் கூறியுள்ளமை கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரையிலான சுப நேரத்திலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் சி.வீ.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவர் அனந்தி சசிதரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா ஆகியோர், இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (ஐ–07)

(விவரமான செய்திகள் 12,13,14, 15 ஆம் பக்கங்களில்)

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் இந்த இருவரும் சில இரகசிய ஆவணங்களை ஒப்படைத்துள்ள நிலையில் அந்த ஆவணங்களைப் பகிரங்கப்படுத்த அவர்கள் முடிவெடுத்துள்ளனராம்.

குண்டுத்தாக்குதல் தொடர்பில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுத்து மூலம் தாம் அறிவித்த ஆவணங்களையே இந்த இருவரும் பகிரங்கப்படுத்தவுள்ளனர் என அறிய முடிகிறது. (ஐ)

## அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வருக்குக் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கவும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகிறது.

யாழ்.பல்கலைக்கழகப் பேரவைக்கு வெளிவாரி உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 14 பேரின் பட்டியலை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு கடந்த வாரம் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு அனுப்பிவைத்திருந்தது.

இந்த பெயர்ப்பட்டியல் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் எழுந்தன.

இந்த நிலையில் பேராசிரியர்கள் இருவரும் மருத்துவ வல்லுநர் ஒருவரும் கையொப்பமிட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தனர். அந்தக் கடிதத்தின் பிரதிஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கு வெளிவாரி உறுப்பினர்கள் தெரிவில் அடிப்படை நியமங்கள்கூட பின்பற்றப்படவில்லை. மருத்துவர், மதரீதியான பிரதிநிதி மற்றும் இராமநாதன் அறக்கட்டளையைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்டவர்கள் தெரிவு செய்யப்படவில்லை.

மேலும் யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் கூட இந்தத் தெரிவில் இடம்பெறவில்லை – என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவைக்கு தற்போதுள்ள பதவி வழி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அமைய மேலும் மூவரை வெளிவாரி உறுப்பினர்களாக நியமிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பேரவை நியமனம் இறுதிப்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–07)

காலைக்கதிர் Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மாற்று அணியின் மாற்றுக் கொள்கை தமிழீழத் தனியரசை நிர்மாணிப்பதா?

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் அரசியலை நோக்குபவர்கள் ஏதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏகபோக அரசியல் பிரதிநிதித்துவத்துக்கு மாற்றான – மக்கள் பிரதிநிதித்துவத்துக்கான – அணி ஒன்று களத்திற்கு வந்துவிட்டதாகவே நேற்றைய அரசியல் நிகழ்வுகளை அவதானிப்பர். ஆனால் கொள்கை – கோட்பாட்டு ரீதியிலும் பெரிய மாற்று ஒன்று வந்திருக்கின்றமையை எத்தனைபேர் நோக்கியிருப்பீர்கள்?

கோட்பாட்டு ரீதியில் ஓர் ஆபத்தான விளையாட்டுக்களம் திறக்கப்பட்டிருப்பதாகவே – வலை விரிக்கப்பட்டிருப்பதாகவே – தோன்றுகின்றது. அது எத்தனை அவதானிகளால் நோக்கப்பட்டிருக்கும் என்பதுதான் கேள்வி.

மாற்று அணி என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் பிரதிநிதித்துவப் போட்டியில் வீழ்த்தி, வாக்குகள் பற்றிய அட்சரகணிதத்தில் விஞ்சி நிற்கவேண்டும் என்ற இலக்கைக் கொண்டது என்பது வெளிப்படையானதுதான். ஆனால் அதற்காக – வாக்கு வங்கியைக் கவர்ந்து கபளீகரம் பண்ணுவதற்காக – ‘கரணம் தப்பினால் மரணம்’ என்ற ஆபத்தான விளையாட்டை மாற்று அணி கையில் எடுத்திருப்பதாகவே படுகின்றது.

தீவிரத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை எடுத்தாலும் கூட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – கஜேந்திரகுமார் அணி – சொல்லாடல்களில் மிகுந்த அவதானத்தையும் கவனத்தையும் பொறுப்புணர்வையும் செலுத்தியே அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றது.

என்னதான் அவதானமாகவும் பொறுப்புணர்வோடும் நடந்தாலும், சில சமயங்களில் Mob Mentality (கும்பல் மன நிலை) பொறுப்பானவர்களையும் குழப்பதற்றத்துக்குள் ஆழ்த்தித் தவறிழைக்கத் தூண்டிவிடும்.

தனித்தனியாக இயங்கிய நான்கு கட்சிகள் ஒன்றிணையும்போது இத்தகைய ‘கும்பல் மனநிலை’ சில தரப்புகளுக்கு வந்து விட்டதோ என்று சிந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மாற்று அணி என்ற நோக்கில் – ‘தமிழ் மக்கள் தேசிய கூட் டணி’ என்ற பெயரில் – நேற்று இறுதி செய்யப்பட்ட புதிய தரப்பின் கொள்கைக் கோட்பாடு பற்றிய அறிவிப்பே இத்தச் சிந்தனையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழருடைய விடுதலைப் போராட்டத்தைத் திரும்பிப் பார்ப்பவர்களுக்கு அதில் முக்கிய மைல்கல்லாக ‘வட்டுக்கோட்டைத் தீர்மானம்’ தென்படும்.

வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் 1976 மே 14ஆம் திகதி இடம் பெற்ற தமிழர் விடுதலை முன்னணியின் முதலாவது மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அது.

பின் நாள்களில், திம்புவிலிருந்து இன்று வரை, அதிகம் பிரஸ்தாபிக்கப்படும் ‘தமிழர்கள் ஒரு தனியான தேசிய இனம்’, ‘வடக்கும் கிழக்கும் அவர்களின் பாரம்பரிய – பூர்வீக – தாயகம்’, ‘அந்தத் தாயகத்துக்குத் தனியான சுயநிர்ணய உரிமை வரலாற்று ரீதியாக உண்டு’ என்ற மூன்று கோட்பாடுகளையும் அந்த வட்டுக்கோட்டைத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

அத்துடன் அது நிற்கவில்லை. அதற்கு அப்பாலும் செல்கின்றது. இந்த மூன்று கோட்பாடுகளினதும் அடிப்படையில் ‘சுதந்திரமான இறையாண்மையுடைய, மத சார்பற்ற, சோலிஸ தமிழீழ அரசு மீளப்பட்டு, மீள்நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என இந்த மாநாடு தீர்மானிக்கின்றது’ – என்று அங்கு முடிவு செய்யப்பட்டது.

இந்தத் தீர்மானம் மீதான சர்ச்சையே இப்போது புதுவடிவம் எடுத்திருக்கின்றது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் இன்றைய சர்ச்சையின் பின்னணியில் இரண்டு அடிப்படைகளில் பார்க்கப்படவேண்டி உள்ளது.

ஒன்று – தமிழரின் மூன்று அடிப்படை அல்லது பிரதான உரிமைகள் பற்றியது. அதாவது தனித் தேசிய இனம்(தேசியம்), தனியான தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியவை பற்றியது. அடுத்தது – இந்த மூன்றின் அடிப்படையில் தனிநாடு அமைப்பது பற்றியது.

1977 பொதுத் தேர்தலில் இந்த இரண்டுக்கும் சேர்த்துத்தான் தமிழ் மக்களிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆணை கோரியது. பெற்றும் கொண்டது. இனி விடயத்துக்கு வருவோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொடர்ச்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைக் கைவிட்டு விட்டதாகக் காட்டிக் கொண்டாலும் இந்த இரண் டில் முதலாவதைப் பற்றிப் பிடித்திருப்பது போன்றே காட்டி வருகின்றது. தனித்தேசிய இனம், தனியான தாயகம், சுயநிர்ணய உரிமை மூன்றையும் அது தொடர்ந்து பேச்சளவிலேனும் வலியுறுத்தியே நிற்கின்றது.

கூட்டமைப்புக்கு மாற்று என்ற பெயரில் நேற்று உருவான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் உடன்பாட்டிலும் இந்த முதலாவது விடயமே– தேசம், தாயகம், சுயநிர்ணய உரிமை பற்றியே – வலியுறுத்தப்படுகின்றது.

ஆனால், அதற்கு அப்பால், இந்த மூன்று விடயங்களையும் ஒட்டி 1977இல் மக்கள் வழங்கிய ஆணையை ஏற்று, இறைமையுடனான உயர்ந்த மக்கள் சுயாட்சியை சமஷ்டி அடிப் படையில் பெறுவது குறித்தும் அது கூறுகின்றது.

அத்துடன் விடயம் அமைந்தால் சர்ச்சையில்லை. ஏனென்றால் கூட்டமைப்பும் கூட செயலில் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் சொல்லிலாவது இந்த மூன்று அடிப்படைக் கோட்பாடுகளைப் பேசிக் கொண்டுதான் இருக்கின்றது. – தனிநாடு கோராமல்.

ஆனால், நேற்றுத் தமது புதிய கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வில் – ஒப்பந்தம் கைச்சாத்தான நிகழ்சியில் – பேசிய அதன் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்ட தவறுகள் என்ற பாணியில் வரிசைப்படுத்தி சுட்டிக்காட்டிய விடயங்களில் ‘வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைக் கைவிட்டமை’ என்பதும் ஒன்றாகச் இருந்தது.

அப்படியாயின் – வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் ‘சோலிஸ தமிழீழ அரசை நிறுவுதல்’ என்ற முடிவை கூட்டமைப்புக் கைவிட்டமை தவறு என்று குறிப்பிட்டு அதை வைகின்றாரா விக்னேஸ்வரன் என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

கூட்டமைப்பு அதனைக் கைவிட்டமை தவறு என்று கூறும் விக்னேஸ்வரன் அதன் மூலம் தமது புதிய கூட்டணி அந்தத் தவறைச் செய்யாமல் அந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைப் பற்றி நிற்கின்றது என்று கூறவருகின்றாரா என்ற கேள்வியும் தொடர்கின்றது.

தமிழர் தேசம், தாயகம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையில் மட்டும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நோக்குவதும், தனித் தமிழீழம் அமைக்கும் அப்பிரகடனத்தின் அடிப்படையில் அதை அணுகுவதும் இன்றைய நிலையில் வேறுவேறானவை. இதில் எதை விக்கி வலியுறுத்துகின்றார்? அவரே தெளிவுபடுத்தினால் நல்லது. ஏனெனில் இது கரணம் தப்பினால் மரணம் என்ற கோட்பாட்டுக் குழப்பம் ஆகும்.

# வேலையற்ற பட்டதாரிகள் மட்டக்களப்பில் போராட்டம்











மட்டக்களப்பு, பெப். 10

மட்டக்களப்பில் வேலையற்ற பட்டதாரிகளால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

காந்தி பூங்கா முன்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை ஊர்வலமாக பேரணியாக சென்ற வேலையற்ற பட்டதாரிகள், மணிக்கூட்டுக் கோபுரம் ஊடாகச் சென்று மீண்டும் காந்திபூங்காவை வந்தடைந்து, அங்கு கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பொதுத்தேர்தலுக்கு முன்பாக வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனங்களை வழங்க கோரியும் பட்டதாரிகள் நியமன வயதெல்லையை 35க்கு மேல் உயர்த்துமாறு கோரியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

‘உயர்த்து உயர்த்து வயதெல்லையினை உயர்த்து’, ‘வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேதனையைக் கொடுக்காதே’, ‘பிரிவினையின்றி நியமனம் வழங்கு’, ‘பொதுத்தேர்தலுக்கு முன்பாக நியமனங்களை வழங்கு’ போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கே.அனிதன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பெருமளவான பட்டதாரிகள் கலந்துகொண்டனர்.

கடந்த மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 45வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பிரிவினைகள் இல்லாமலும் நியமனங்கள் வழங்கப்பட்ட நிலையில், கடந்த ஆட்சிக்காலத்தில் பல்வேறு வகைகளிலும் நியமனங்கள் புறக்கணிக்கப்பட்டதாகப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், இன்று வயதெல்லையினை 35வயதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் பல பட்டதாரிகள் வேலைவாய்ப்பினை பெறும் நிலையில்லாமல் போகும் நிலையுள்ளதாகவும் இங்கு பட்டதாரிகள் சுட்டிக்காட்டினர்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், அந்த நியமனங்கள் தேர்தலுக்கு முன்பாக வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படாவிட்டால் மட்டக்களப்பு மாவட்டம் உட்பட நாட்டின் அனைத்து பாகங்களிலும் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலையேற்படும் எனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ஐ)

# பாகிஸ்தானின் இராணுவ உதவிகள் இலங்கைக்குத் தொடர்ந்து கிட்டும்



கொழும்பு,பெப்.10

இலங்கைக்கு தொடர்ந்தும் இராணுவ உதவிகள் வழங்கப்படும் என்று பாகிஸ்தான் விமானப் படை தளபதி எயார் சீவ் மார்ல் முஜாஹிட் அன்வர்கான் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவை சந்தித்தபோதே அவர் இதனை குறிப்பிட்டார்

பாதுகாப்பு தொடர்பான சகல உதவிகளும் இலங்கைக்கு வழங்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

இரண்டு நாடுகளும் தமது ஒத்துழைப்பை பலப்படுத்திக்கொள்ள இந்த சந்திப்பின்போது இணங்கின எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை

**11.02.2020 - செவ்வாய்க்கிழமை**

நட்சத்திரம்: பூரம் மாலை 05. 54 வரை
திதி : துதியை மு.ப. 09.36 வரை

இராகுகாலம் : 03.34 – 05.04
சுப நேரம் : 11.04 – 12.34

# காணாமல்போனோரின் முழு விவரப் பட்டியலை தயாரிக்கும் முயற்சியில் அதற்கான அலுவலகம்

கொழும்பு,பெப்.10

காணாமற்போனவர்கள் பற்றிய முழுமையான தகவல் திரட்டை மேற்கொள்ளவுள்ளதாக காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகம் அறிவித்துள்ளது.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் தமது அலுவலகங்களில் இது தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளரால் இது தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் –

காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகமானது 2016ம் ஆண்டின் 14ம் இலக்க (தாபித்தலும் நிர்வகித்தலும் மற்றும் கடமைகளைப் பொறுப்பேற்றலும்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுடன் யுத்தம், அரசியல் அமைதிக்குலைவு அல்லது குடியியல் குழப்பங்கள் அல்லது வலிந்து காணாமற்போகச் செய்தலின் விளைவுகள் என்பவற்றுடன் தொடர்புடையதாக காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆள்களின் நிலையை தாபிப்பதற்கான விளக்கமான பணிப்பாணைகளையும் கொண்டுள்ளது. காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகமானது சட்டத்தின் 10 (1) (உ) பிரிவின் பிரகாரம் காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களுடன் தொடர்புடைய தரவுகளை சேகரிப்பதற்கான கடமையை கொண்டுள்ளது. இன்று வரையில் இலங்கையானது காணாமற் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் குறித்த விரிவான பட்டியலொன்றினைத் தயாரித்திருக்கவில்லை.

காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகமானது அதற்கு கிடைத்துள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தற்காலிக பட்டியலை ஒருங்கிணைக்கின்றது. இப்பட்டியலானது,

1) 2018 பெப்ரவரியில் காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் தாபிக்கப்பட்டதிலிருந்து அதனால் நேரடியாக பெறப்பட்ட அனைத்து முறைப்பாடுகள்,

2) தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம், அரசகரும மொழிகள் மற்றும் இந்து சமய விவகார அமைச்சினால் மாவட்டச் செயலகங்களின் வாயிலாக பெறப்பட்டு காணமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்திற்கு அனுப்பட்ட முறைப்பாடுகள் மற்றும்

3) காணாமற்போன ஆள்கள் குறித்த அலுவலகத்தின் கோரிக்கையின் பேரில் யுத்த காலத்தில் காணாமற்போனவர்களாக முப்படைகளினால் வழங்கப்பட்ட தரவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

காணமற் போனதாக மற்றும் காணாமலாக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட ஆள்களின் தற்காலிக பட்டியலானது உறுதிப்படுத்தும் செயன்முறைக்கு உள்ளாக்கப்படவுள்ளது. காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகமானது காணாமற்போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் குறித்த விரிவான பட்டியலொன்றினைத் தயாரிப்பதற்காக முன்னைய ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் உள்ளடங்கலாக ஏனைய மூலங்களிலிருந்தும் தரவுகளை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டோரது குடும்பங்கள் தங்களது காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட அன்புக்குரியவர்கள் தொடர்பான விவரங்கள் இத்தற்காலிக பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிசெய்து கொள்வதற்காக கிழமை நாள்களில் காலை 09 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையிலான காலப்பகுதியில் காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தினை பின்வரும் 011 – 2056504, 011 – 2667108 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்வதற்கோ அல்லது எமது தலைமை அலுவலகத்திற்கு அல்லது பிராந்திய அலுவலகங்களிற்கு வருகை தரவோ வரவேற்கப்படுகின்றார்கள்.

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்த தரவுகள் பட்டியலில் இல்லாமலிருந்தாலோ அல்லது முறையாக இல்லாதிருந்தாலோ அத்தகைய விவரங்களை பதிவுசெய்து காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு உதவுமாறு குடும்ப உறுப்பினர்கள் பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வேறு ஏதேனும் தகவல்கள் கிடைக்கப் பெறுமானால் அது காணமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் உறுதிப்படுத்தும் செயற்பாட்டுக்கு உதவக் கூடியதாக இருக்குமாகையால் 15 மார்ச் 2020 இற்கு முன்னதாக அத்தகைய தகவல்களை

அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு பொது மக்கள் தயவுடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள்.

காணாமற்போன ஆள்கள் பற்றிய தலைமை அலுவலகம்

* 32, சேர் மார்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, கொழும்பு 07.
* யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம்
இல 124, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.
* மாத்தறை பிராந்திய அலுவலகம்
இல.59, தர்மாராம மாவத்தை, கோட்டை, மாத்தறை.
* மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம்
இல.124, மத்திய வீதி, மட்டக்களப்பு.
* மன்னார் பிராந்திய அலுவலகம்
இல.05, புகையிரத நிலைய வீதி, மன்னார்.

## குருத்தலாவையில் மோசமான தாக்குதல்: 3 ஆசிரியர்கள், 8 மாணவர்கள் படுகாயம்!

குருத்தலாவை,பெப்.10

குருத்தலாவை பாடசாலை ஒன்றைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படு காயமடைந்த 11 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என போகஹ கும்புர பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் வெள்ளியன்று இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த 3 ஆசியர்களும், 8 மாணவர்களும் பொரலந்த பிரதேச வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டிருந்தனர்

விளையாட்டுப் போட்டி ஒன்றில் கலந்து கொண்டு விட்டு மீண்டும் தங்கள் பாடசாலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது வான் ஒன்றில் இவர்களைப் பின்தொடர்ந்த நபர்கள், ஆசிரியர்களும் மாணவர்களும்

பயணித்த வாகனத்தை நிறுத்தி அவர்களைத் தாக்கினர் எனப் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

## மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.10

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை செவ்வாய்க்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலை, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், சுப்பர்மடம் மரின்வெல்த் ஐஸ் தொழிற்சாலை, வேம்பிராய், கனகம்புளியடி சந்தி, சரசாலை ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில்-**

புதுக்ககுளம் கோவில்குளம் கிராமம், இலுப்பைக்குளம், மதவுவைத்தகுளம்கிராமம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## மொட்டுச் சின்னத்திலேதான் பொதுஜன பெரமுன இறங்கும்

### நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம்



கண்டி,பெப்.10

வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தனது மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி - பூஜாப்பிடிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சுதந்திர கட்சியுடன் பொதுஜன முன்னணி கூட்டணி அமைத்து பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் எனப் பலரும் தெரிவிக்கின்றனர். எனினும், தேர்தலுக்கு முன்னதாகவோ அல்லது பின்னரோ கூட்டணி அமைக்கலாம். எவ்வாறாயினும், மொட்டுச்சின்னத்திலேயே போட்டியிடுவோம் என்று நாமல் ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# டெல்லியில் ஆட்சி யாரிடம்? முடிவு நாளை வெளியாகும்!



புதுடெல்லி,பெப்.19

70 இடங்களை கொண்ட டெல்லி சட்ட சபைக்கு நேற்று முன்தினம் தேர்தல் அமைதியாக நடந்தது. 61.46 சதவீத வாக்குகள் பதிவாயின. நாளை வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் வெளியிடப்படும்.

டெல்லி சட்டசபை தேர்தல் மூலம் தொடர்ந்து 3ஆவது முறையாக ஆட்சியில் அமர முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியும், அந்த கட்சியிடம் இருந்து ஆட்சியைத் தட்டிப்பறிக்க பாரதீய ஜனதா கட்சியும் பலத்த போட்டியில் இறங்கின. இவ்விரு கட்சிகளுடன் காங்கிரஸ் கட்சியும் களத்தில் குதித்தது.

ஆம் ஆத்மி நிறுவனர் கெஜ்ரிவால், பாரதீய ஜனதா முன்னாள் தலைவர் அமித் ஷா, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் தீவிர பிரசாரம் மேற்கொண்டனர்.

இந்த தேர்தலில் முதல் – மந்திரி கெஜ்ரிவால் (புது டெல்லி), பாரதீய ஜனதா தலைவர் விஜேந்தர் குப்தா (ரோகிணி), காங்கிரஸ் தலைவர் அரவிந்தர் சிங் லவ்லி(காந்திநகர்) ஆகியோர் முக்கிய வேட்பாளர்கள். மொத்தம் 672 வேட்பாளர்களின் அரசியல் எதிர்காலம், இந்த தேர்தலில் நிர்ணயிக்கப்படுகிறது.



## டெல்லியில் மூன்றாவது முறையாக ஆம் ஆத்மி கட்சி ஆட்சி

தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகள்

புதுடெல்லி, பிப்.9-

70 இடங்களை கொண்ட டெல்லி சட்டசபை தேர்தலில் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியாகி உள்ளன. கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியை பிடிக்கும் என கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

| | ஆம் ஆத்மி | பாரதீய ஜனதா | காங்கிரஸ் |
|---|---|---|---|
| டைம்ஸ்நவ் - இப்சோஸ் | 47 | 23 | - |
| ரிபப்ளிக் டி.வி. - ஜன் கி பாத் | 48-61 | 9-21 | 0-1 |
| டி.வி.9 பாரத்வர்ஷ் - சிசரோ | 52-64 | 6-16 | 1 |
| இந்தியா நியூஸ் - நேட்டா | 53-57 | 11-17 | 0-2 |
| ஏபிபி நியூஸ் - சிஓட்டர் | 49-63 | 5-19 | 0-4 |

மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 1 கோடியே 46 லட்சத்து 92 ஆயிரத்து 136. இவர்கள் வாக்கு அளிப்பதற்காக 2,688 இடங்களில் 13 ஆயிரத்து 571 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஏறத்தாழ 80 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

காலை 8 மணிக்கு வாக்குப்பதிவு மிக மிக மந்தமாகவே தொடங்கியது.

ஆனாலும் கடும் குளிர் காரணமாக (வெப்ப நிலை 44.60 டிகிரி பாரன்ஹீட்தான்) காலையில் வாக்குப்பதிவு செய்ய மக்கள் அலை, அலையாக வரவில்லை. முதல் ஒரு மணி நேரத்தில் 3.66 சதவீத வாக்குகளே பதிவாகின.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், மனைவி சவீதாவுடன் ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் கேந்திரிய வித்யாலயா வாக்குச்சாவடியில் வாக்குப் பதிவு செய்தனர்.

டெல்லி துணை நிலை கவர்னர் அனில் பைஜால், மனைவி மாலாவுடன் கிரேட்டர் கைலாஷ் வாக்குச்சாவடியில் ஓட்டுப்பதிவு செய்தார்.

முதல்மைச்சர் கெஜ்ரிவால், மனைவி சுனிதா, புதிய வாக்காளரான மகன் புல்கிட் ஆகியோருடன் வந்து சிவில் லைன்ஸ் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ராஜ்புரா போக்குவரத்து ஆணைய வாக்குச் சாவடியில் வாக்குப்பதிவு செய்தார். அதன்பின்னர் நிருபர்களிடம் பேசிய அவர், நாங்கள் செய்த பணிகளின் அடிப்படையில் மக்கள் வாக்களிப்பர். டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி மூன்றாம் முறையாக ஆட்சி அமைக்கும் என்று கூறினார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மகள் பிரியங்காவுடன் நிர்மாண் பவன் வாக்குச்சாவடியிலும், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அவுரங்கசீப் லேன் என்.பி.சீனியர் செகண்டரி பள்ளி வாக்குச்சாவடியிலும் வாக்குப் பதிவு செய்தனர்.

முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, பாரதீய ஜனதா மூத்த தலைவர் எல்.கே. அத்வானி, மத்திய மந்திரிகள் எஸ்.ஜெய்சங்கர், ஹர்தீப்சிங் பூரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மூத்த தலைவர் பிரகாஷ் கரத் ஆகியோரும் வாக்களித்தனர்.

# கொரோனா பரவும் அபாயம் 17ஆவது இடத்தில் இந்தியா

## ஆய்வு முடிவில் தகவல்

புதுடில்லி,பெப்.10

இந்தியா உள்ளிட்ட 20 நாடுகளில் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இருப்பதாக ஜேர் மனியின் ஹம்போல்ட் பல்கலை நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

சீனாவில் கடந்த சில நாள்களாக வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸிற்கு இது வரை 813 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 50,000 பேர் வரை வைரஸால், பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சீனாவில் கண்டறியப்பட்ட இந்த உயிர் கொல்லி வைரஸ் பல நாடுகளுக்கும் பரவி வருகிறது.

இது குறித்து ஜேர்மனியின் ஹம்போல்ட் பல்கலை மற்றும் ராபர்ட் கோச் நிறுவனம் இணைந்து ஆய்வுமேற்கொண்டனர். இதற்காக, உலகம் முழுவதும் 4000 விமான நிலையங்களில், சுமார் 25 ஆயிரம் பேரிடம், அவர்கள் வெளிநாட்டிற்கு சென்றுவரும் பயணிகள் மூலம் வைரஸ் பரவுவது குறித்து கணக்கிடப்பட்டது.

ஆய்வின் படி, உலகளவில் மொத்தம் 20 நாடுகளில் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இருக்கிறது. அதில், இந்தியா 17 ஆவது இடத்தில் உள்ளது. அதாவது, விமானங்கள் மூலம் வெளிநாட்டில் இருந்து வரும் இந்தியர்களில் 0.219 சதவீதம் பேருக்கு இந்த அறிகுறி இருந்ததாக கூறப்படுகிறது.

இந்திய விமான நிலையங்களில் டில்லி விமான நிலையத்திற்கு வருவோரில் 0.066 சதவீதத்தினரும், மும்பை விமான நிலையத்தில் 0.034 சதவீதத்தினரும், கொல்கத்தா விமான நிலையத்தில் 0.02 சதவீதத்தினரும் இந்த அறிகுறியுடன் வருகின்றனர் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தாய்லாந்து, ஜப்பான் நாடுகளில் தலா 25 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

# அமைச்சர் பதவி கேட்டு மிரட்டல் கர்நாடக முதல்வருக்கு நெருக்கடி

பெங்களூரு,பெப்.10

அமைச்சர் பதவி அளிக்கவில்லை என்றால் எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமாச் செய்யவும் தயாராக இருக்கிறார் என கர்நாடகத்தில் பாரதீய ஆளும் ஜனதாக் கட்சியின் மூத்த எம்.எல்.ஏ.க்களில் ஒருவரான உமேஷ் கத்தி, முதல்வர் எடியூரப்பாவுக்கு எச்சரிக்கை விடுத்து பா.ஜ.கவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

கர்நாடகாவில் பா.ஜ.க. சார்பில் எடியூரப்பா முதல்வராக பதவி ஏற்றபோது இவருடன் 17 பேர் அமைச்சர்கள் பதவி ஏற்றுக்கொண்டனர். பின்னர் இதே அமைச்சரவையில் கடந்த 6ஆம் திகதி மேலும் 10 பேர் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக் கொண்டனர். இதன் இடையே பா.ஜ. கவைச் சேர்ந்த முன்னணி எம்.எல்.ஏ.க்களுக்கு அமைச்சர் பதவி அளிக்காதமை கட்சிக்குள் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.



பா.ஜ.க. மூத்த எம்.எல். ஏ.க்களில் ஒருவரான உமேஷ் கத்தி நேற்று முன்தினம் முதல்வர் எடியூரப்பாவை, பெங்களூரு டாலர்ஸ் காலனியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்துள்ளார்.

அப்போது அவர், "எனது பெயருக்கு களங்கம் ஏற்பட நேர்ந்தால் ஒரு நிமிடமும் தாமதிக்காமல் கட்சியிலிருந்து விலகுவது மட்டுமின்றி எம்.எல்.ஏ. பதவியையும் ராஜினாமா செய்து =விடுவேன்.

"எட்டு முறை எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்யப்பட்டுள்ளேன். செல்லும் இடமெல்லாம் உமேஷ் கத்திக்கு அமைச்சர் பதவி அளிக்கப்படும் என கூறிவந்தீர்கள். அப்படியிருக்க எந்த காரணத்திற்காக அமைச்சர் பதவி அளிக்காமல் என்னைப் புறக்கணித்தீர்கள்?" – என்று கேட்டுள்ளார்.

இதற்கு பதில் அளித்த முதல்வர், "நான் உங்களை (உமேஷ் கத்தியை) அமைச்சரவையில் சேர்க்கத் தயாராக இருந்தேன். ஆனால், சி.பி.யோகேஷ்வரை அமைச்சராக்க வேண்டும் என்ற காரணத்திற்காக உங்களுக்கும், அரவிந்த் லிம்பாவளிக்கும் அமைச்சர் பதவி அளிக்காமல் கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும் பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முன் எப்படியாவது உங்களை அமைச்சரவையில் சேர்த்துக்கொள்கிறேன்" – என உமேஷ் கத்தியிடம் கூறியுள்ளார் என தெரிகிறது.

அமைச்சர் பதவி வழங்காவிட்டால் எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்வேன் எனக் கூறிய உமேஷ் கத்தி, எடியூரப்பா வீட்டில் இருந்து வெளியேறியுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த எடியூரப்பா, உமேஷ் கத்தியை சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும்படி துணை முதல்வர் லட்சுமண் சவதிக்கு உத்தரவிட்டுள்ளார். முன்பு குமாரசாமி ஆட்சியிலும் எம்எல்ஏ.க்கள் மிரட்டல் விடுத்தனர்.

பின்னர் அதனால் அவரது ஆட்சியே கவிழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் இந்திய வம்சாவளி பெண்

## இந்தியர்களுக்கும், இந்துகளுக்குமாகக் குரல் கொடுப்பாராம்



வாஷிங்டன்,பெப்.10

அமெரிக்காவில், இந்த ஆண்டு நவம்பரில் நடக்க உள்ள நாடாளுமன்றத் தேர்தலில், வேர்ஜீனியாவில், குடியரசுக் கட்சி சார்பில், இந்திய வம்சாவளிப் பெண் போட்டியிட உள்ளார்.

அமெரிக்காவில், இந்த ஆண்டு நவம்பர், 3 ஆம் திகதி, நாடாளுமன்றத் தேர்தல் நடக்க உள்ளது. தேர்தலைச் சந்திக்க குடியரசுக் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் தயாராகி வருகின்றன.

இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தலில், வேர்ஜீனியாவிலிருந்து, குடியரசுக் கட்சி சார்பில், அமெரிக்க வாழ் இந்தியரான மங்கா அனந்தத்முலா போட்டியிட உள்ளார். ஆந்திர பிரதேசத்தில் பிறந்த இவர், சென்னையில் பள்ளிக் கல்வியும், உத்தரபிரதேச மாநிலம், ஆக்ராவில் பட்டப்படிப்பும் முடித்த பின், அமெரிக்காவில் குடியேறினார். அமெரிக்க அரசின், இராணுவ தளவாடங்கள் கொள்முதல் திட்டத்தில், அரசு ஒப்பந்ததாரராகப் பணியாற்றினார்.

இந்நிலையில், வேர்ஜீனியாவில் போட்டியிடுவது பற்றி மங்கா கூறியவை வருமாறு: – அமெரிக்க நாடாளுமன்றத்தில் என் குரல் ஒலிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களுக்காக, இந்துகளின் நலன்களுக்காக குரல் கொடுப்பேன். வேர்ஜீனியா, எப்போதும் ஜனநாயக கட்சிக்கு ஆதரவாக இருந்துள்ளது.

ஆனால், அதிபர் ட்ரம்பின் சிறப்பான செயல்பாட்டால், ஜனநாயக கட்சி ஆதரவாளர்கள் பலரும், குடியரசு கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்க உள்ளனர். அதனால், இங்கு கடந்த, ஆறு முறை வெற்றி பெற்றுள்ள ஜனநாயக கட்சியின், கேரி கொனோலியை தோற்கடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. – இவ்வாறு, அவர் கூறினார்.

# 38 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்த பின் சிறையில் திருமணம் செய்யும் ஜோடி

தெஹ்ரான்,பெப்.10

பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர்கள் பரிபா அதெல்காஹ், ரோலண்ட் மார்சல். இருவரும் ஆராய்ச்சியாளர்கள். 60 வயது கடந்த இவர்கள் 38 ஆண்டுகளாக திருமணம் செய்து கொள்ளாமல் இணைந்து வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலையில், பரிபா ஈரானுக்கு ஆராய்ச்சி நடத்த சென்றார். ஆனால் அவர் உளவு வேலை பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, அங்குள்ள எவின் சிறையில் அடைக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து அவரை பார்ப்பதற்காக ஈரான் சென்ற ரோலண்ட் மார்சலும் கைது செய்யப்பட்டார்.

பரிபா மீதான உளவுக் குற்றச்சாட்டு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டாலும், இருவரும் ஈரான் பாதுகாப்புச் சட்டங்களை மீறினர் என்ற குற்றச்சாட்டு உள்ளது.

இந்த நிலையில் இருவரும் திருமணம் செய்து கொள்ள அனுமதி அளிக்க வேண்டும்



என்று சிறை அதிகாரிகளிடம் தனித்தனியே மனு அளித்துள்ளனர்.

இந்த தகவலை அவர்களின் சட்டத்தரணி வெளியிட்டுள்ளார்.

அவர்கள் திருமணம் செய்து கொண்டு விட்டால் சிறையில் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்து பேச சட்ட ரீதியான அனுமதி கிடைக்கும் என்று தகவல்கள் கூறுகின்றன.

இது குறித்து சிறைத்துறை அடுத்த சில நாட்களில் முடிவு எடுக்கும் என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

# 60 யானைகளை வேட்டையாட ஏலத்தில் அனுமதி அளித்தது பொட்ஸ்வானா அரசு!

ஆப்பிரிக்க நாடான பொட்ஸ்வானாவில் 60 யானைகளைக் கொல்வதற்கு அந்நாட்டு அரசு அனுமதியளித்துள்ளது.

உலகிலேயே அதிக யானைகள் இருப்பதால், அங்கு யானை, மனித மோதல் சம்பவங்கள் அதிகளவில் நடந்து வருகின்றன. நீர் மற்றும் உணவு தேடி வரும் யானைகள் விளைநிலங்களுக்குள் புகுந்து விடுவதாக விவசாயிகள் குற்றச்சாட்டு எழுப்பி வந்தனர்.

இந்த நிலையில் யானைகளை வேட்டையாடுவதற்கு கடந்த 5 ஆண்டுகளாக விதிக்கப்பட்டிருந்த தடையை அந்நாட்டு அதிபர் சமீபத்தில் நீக்கினார். இதையடுத்து மனிதர்களுக்கு அதிக அளவில் இடையூறு ஏற்படுத்தும் 60 யானைகளைக் கொல்வதற்கு அந்நாட்டு அரசு அனுமதியளித்துள்ளது.

இதற்காக 6 தனியார் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு அவற்றுக்கு



உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உரிமமும் இந்திய மதிப்பில் ஒரு கோடியே 29 லட்சம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. பொட்ஸ்வானா அரசின் முடிவுக்கு இயற்கை ஆர்வலர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

# தாய்லாந்தில் இளம் ராணுவ அதிகாரி வெறியாட்டம் 26 சிவிலியன்கள் சுட்டுக் கொலை: 50 பேர் படுகாயம்



பாங்கொக்,பெப்.10

தாய்லாந்தில் இளம் ராணுவ அதிகாரி ஒருவர் நடத்திய திடீர் துப்பாக்கிச் சூட்டில் 25 பேர் கொல்லப்பட்டனர். ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இருநு சுமார் 250 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள் கோரத் என்ற இடத்தில் சார்ஜெண்ட் மேஜர் ஜக்கரபந்த் தொம்மா என்ற இளநிலை இராணுவ அதிகாரி நேற்று முன்தினம் காலை அங்கிருந்த இராணுவக் கவச வாகனத்தைக் கடத்த முயன்றார். அவரைத் தடுக்க முயன்ற ஈராணுவ வீரர்களை துப்பாக்கியால் சுட்டுத் தள்ளினார். அவரின் மேலதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

பின்னர் அங்கிருந்து இராணுவ ஆயுதங்கள் வைத்திருந்த இடத்திற்குச் சென்ற தொம்மா ஏராளமான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அதே வாகனத்தில் டெர்மினல் 21 என்ற வணிக வளாகத்திற்குச் சென்றார்.

முன்னதாக அவர் அங்கிருந்த புத்த விகாரத்திலும் துப்பாக்கியோடு சென்ற காட்சிகள் அங்கிருந்த சிசிடிவியில் பதிவாகி உள்ளன.

தொடர்ந்து வணிக வளாகம் சென்ற அவர், வெறி பிடித்தவர் போல கண்களில் பட்டவர்களை எல்லாம் சரமாரியாக சுட்டுத் தள்ளினார். வணிக வளாகத்தில் அவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சப்தம் வளாகத்தின் வெளியே எதிரொலித்தது.

இது குறித்து தகவலறிந்து விரைந்த காவல்துறையினர் மீதும் தொம்மா துப்பாக்கியால் சுட்டார். பின்னர் பொதுமக்களில் ஏராளமானோரைப் பணயக் கைதியாகப் பிடித்துக் கொண்டு வணிக வளாகத்தில் பதுங்கிக் கொண்டார். பின்னர் வணிக வளாகத்தில் காயமடைந்தவர்களை மீட்கவும், தாக்குதல் நடத்தியவரைப் பிடிக்கவும் ராணுவ கொமாண்டோக்கள் புகுந்தனர்.

அப்போது மறைந்திருந்த இராணுவ அதிகாரி தொம்மா நடத்திய திடீர் தாக்குதலில் கொமாண்டோ வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சூழ்நிலையிலும் தொம்மா அவ்வப்போது தனது முகநூல் பக்கத்தில் சம்பவங்களை



நேரடியாகப் படம் பிடித்துப் பதிவேற்றிக் கொண்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தொம்மாவின் முகநூல் பக்கம் முடக்கப்பட்டது. பின்னர் வணிக வளாகத்திற்குள் புகுந்த இராணுவ வீரர்கள் ஆங்காங்கே காயமடைந்தவர்களை மீட்டு வெளிக் கொணர்ந்தனர்.

தொடர்ந்து காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ்கள் மூலம் வெளியேற்றப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் நிகழ்விடத்திலும், படுகாயமடைந்து மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் 50க்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதிகாலை 3 மணி வரை துப்பாக்கிச் சப்தம் கேட்டதாகவும், அதன் பின்னர் இறுக்கமான சூழல் நிலவுவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் கண்மூடித்தனமான தாக்குதல் நடத்திய தொம்மா எங்கு உள்ளார்? இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்து விட்டாரா? அவரது பிடியில் இன்னும் எத்தனை பேர் பணயக் கைதிகளாக உள்ளனர்? அவர் காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தியதற்கு என்ன காரணம்? – என்ற விவரங்களைத் தெரிவிக்கத் தாய்லாந்து அதிகாரிகள் முதலில் மறுத்து விட்டனர்.

ஆனால் டெர்மினல் 21 வணிக வளாகத்தைச் சுற்றிலும் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிந்துள்ளனர். தொம்மா நிலப்பிரச்சனையில் சிக்கித் தவித்தார் எனவும், அதனால் ஏற்பட்ட மனஅழுத்தத்தில் இவ்வாறு செய்துள்ளார் எனவும் உயர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

# 17 மணி நேரப் போராட்டத்தின் பின் வெறியாட்ட சிப்பாய் சுட்டுக் கொலை

நாகோன் ராட்சசிமா,பெப்.10

தாய்லாந்து நாட்டில் 26 பேரை கொன்ற இராணுவ வீரர் 17 மணிநேர போராட்டத்திற்கு பின் நேற்றுச் சுட்டு கொல்லப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.



இந்தச் சம்பவத்தில் ஐம்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளனர். அவர்களை காண அந்நாட்டு பிரதமர் பிரயூத் சான் – ஓ – சா சென்றார். பின்னர் வெளியே வந்த அவர் கூறும்பொழுது, “கொல்லப்பட்டவர்களில் 13 வயது நிறைந்த சிறுவன் மற்றும் பாதுகாப்பு படையினரும் அடங்குவர். எங்களுடைய நாட்டில் இதற்கு முன் இதுபோல் நடந்தது இல்லை. இதுவே கடைசி முறையாக இருக்கட்டும்” என கூறினார்.

இராணுவ வீரர் தனது வீட்டை விற்பதில் அவருக்கு இடையூறு இருந்து வந்துள்ளது. தனிப்பட்ட விவகாரமே துப்பாக்கி சூடு நடப்பதற்கு காரணம் என பிரயூத் கூறியுள்ளார். இதனிடையே, 17 மணிநேர போராட்டத்திற்கு பின் நேற்று அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் அவருடன் சேர்த்து இந்த சம்பவத்தில் 27 பேர் உயிரிழந்து உள்ளனர்.

# வாய்க்குள் முடி வளரும் பெண்! அதிர்ச்சியில் மருத்துவர்கள்!!

வாய்க்குள் முடி வளரும் பெண் ஒருவர் குறித்துச் செய்திகள் வெளியாகி யுள்ளன.

PCOS (Polycystic ovary syndrome) எனப்படும் சினைப்பை பாதிக்கும் நோயினால் பல்வேறு இன்னல்களை பெண்கள் சந்திக்கின்றனர். ஆண் ஹோர் மோன்களை அதிகரிக்கும் ஆண்ட் ரோஜென் எனப்படும் சுரப்பி அளவுக்கு அதிகமாக பெண்களின் உடலில் சுரப் பதன் மூலம் இந்நோய் வருகிறது.

ஒழுங்கற்ற மாதவிடாய், உளவியல் சார்ந்த பிரச் சினைகள் , உடல்பருமன் போன்ற பல சிக்கல்களை இந் நோயினால் பெண்கள் சந்திக்கின்றனர், அதிலும் குறிப்பாக உடல் மற்றும் முகத்தில் அதிகப்படியாக முடி வளருவதுதான் பெண்களுக்குப் பெரும் சிக்கலைத் தருகிறது.

ஆனால் இதே நோயின் காரணமாக ஒரு பெண்ணுக்கு வாய்க்குள் கண் இமை போன்று முடி வளருவது மருத்துவர்களை அதிர்ச்சி அடையச்செய்துள்ளது . இத்தாலியை சேர்ந்த 25 வயதுடைய இளம்பெண் ஒருவருக்கு இந்த அதிசய பிரச்சினை வந்து உள்ளது. அவரை பரிசோதித்ததில் அவரின் பற்களின் ஈறுகளில் கண் இமைகளில் போன்று முடி வளருவதை கண்டு மருத்துவர்கள் அதிர்ச் சியடைந்து உள் ளனர்.

மேலும் அவரைத் தொடர்ந்து பரி சோதித்ததில் அந்த பெண்ணுக்கு PCOS எனும் சினைப்பை பாதிப்பு ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

அதன் காரண மாகவே அந்த பெண்ணுக்கு இந்நோய் வந்ததை கண்டுபிடித்து உள்ளனர்.

மேலும் இது குறித்து இத்தாலியில் உள்ள கம்பானியா பல்கலைக்கழ கத்தில் ஆராய்ச்சி நடத்தியதில் இதே போன்று பத்து ஆண்டுகளுக்கு முன் னரும் ஒரு பெண் பாதிக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது. அதிகப்படியான டெஸ்டோஸ்ட்ரோன் உடலில் சுரப்பதன் காரணமாகவே இந்த பிரச்சினை வருவதாகவும், அதற்குத் தீர்வாக குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்தும் மாத்திரைகள் உட்கொள்வதன் மூலம் இந்த அரியவகை நோயைக் குணப்படுத்த முடியும் எனவும் அந்த ஆராய்ச்சியில் கண்டுபிடித்து உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மேலும் மருத்துவர்கள் அந்த பெண்ணின் ஈறுகளில் உள்ள முடியை அகற்றி தசையின் ஒரு பகுதியை ஆய் வுக்கு அனுப்பியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir



# தெளிந்த தமிழ்த் தேசியப் பார்வையும் அறிவார்ந்த அர்ப்பணிப்புள்ள தலைமையும்

எரிகின்ற வீட்டில் கொள்ளி பிடுங்குவது போல் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் சுயநலம் கொண்ட தமிழ் கும்பல்களினால் தமிழ் மக்களின் தேசிய வாழ்வும் தமிழ் சமூகமும் நிர்மூலமாக்கப்பட்டுச் செல்கிறது.

முள்ளிவாய்க்கால் ஒருபுறம் பேரழிவைத் தந்தபோதிலும் மறுபுறம் தமிழ் மக்களுக்கான புது வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கேற்ற ஒரு புதிய வரலாற்றுச் சூழலையும் முன்வைக்கத் தவறவில்லை.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையும் பேரழிவும் அடுத்தகட்ட வரலாற்றை இரண்டில் ஒரு பக்கம் இட்டுச் செல்வதற்கான வாய்ப்பை முன்வைத்தது.

1) இனப்படுகொலை ரீதியிலான வெற்றியின் மூலம் தமிழினத்தை முற்றாக ஒழித்துக் கட்டுவதற்கான வாய்ப்புக்களை பல வழிகளிலும் எதிரிக்கு அது வழங்கியது .

2) எதிரி புரிந்த இனப்படுகொலையின் வாயிலாக எதிரியின் ஈவிரக்கமற்ற மனிதகுல விரோத செயலை உலகளாவிய ரீதியில் அம்பலப்படுத்தி



யதுடன் அத்தகைய இனப்படுகொலைப் பேரழிவிலிருந்து தமிழினம் தன்னை புதிய பாதையில் சிந்தித்து மறுக்கப்பட முடியாத சர்வதேச நியாயப்பாட்டுடன் புது மெருகுடனான புதிய தமிழ்த் தேசியத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பையும் வழங்கியது.

இந்த இரண்டாவதை தமிழ் தலைவர்களும் தமிழ் அறிஞர்களும் செய்வதற்குப் பதிலாக இன அழிப்பை மேலும் நிலைநாட்டவும் உறுதிப்படுத்தவும் வல்ல எதிரியின் செயல்களுக்கும் எதிரியின் நிகழ்ச்சிநிரல்களுக்கும் பொருத்தமாக பொதுவாகத் தமிழ் தலைவர்கள் நடந்து கொண்டனர்.

புதிய நிலைமைகளுக்கும் புதிய சூழல்களுக்கும் பொருத்தமாகத் தமிழ் தேசியத்தை வழிநடத்துவதற்குத் தேவையான புதிய கருத்துக்கள் ஆங்காங்கே உதிரிகளாக சிலரால் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அவை ஒரு பொதுவான அறிவியல் போக்காக உருவெடுக்கவில்லை என்பதுடன் அத்தகைய அறிவார்ந்த கருத்துக்கள் எவையும் அரசியல் தீர்மானங்களாகப் பரிணமிக்கவும் இல்லை.

அறிவியலாளர்கள் அறிவார்ந்த ரீதியில் சமூக, பொருளாதார, அரசியல் கருத்துக்களை முன்வைத்தாலும் அவற்றை அரசியல்வாதிகளே அரசியல் தீர்மானங்களாக வடிவமைத்து முன்னெடுக்க வேண்டும். ஆனால் அரசியல் தலைவர்களிடம் அவ்வாறான அறிவியல் பரிமாணம் அல்லது அறிவார்ந்த பார்வையில்லாதமையினாலும் அவர்களது சுயநலம் கொண்ட அரசியல் அபிலாசைகளினாலும் நடைமுறையில் அவர்கள் எதிரிக்கு சேவை செய்யும் அரசியலையே பிரதானமாக முன்னெடுத்தனர்; தொடர்ந்தும் அவ்வாறே முன்னெடுக்கின்றனர்.

அழிவுகளும், இழப்புகளும், துன்பங்களும் நிறைந்த ஒரு பிரளயம் போன்ற இந்த காலகட்டத்தில் மக்களின் தந்தையாய், தாயாய் செயற்படவல்ல தலைவர்கள் உருவாக வேண்டியது அவசியம். தன் குட்டியை பேரன்புடனும் பெரும் அக்கறையுடனும் அரவணைத்து வளர்க்கும் தாய் யானை போன்ற தலைவர்களை பிரசவிக்க வல்லதற்கான வரலாற்று கட்டத்தை முள்ளிவாய்க்காற் பேரழிவு பிறப்பித்துள்ளது.

தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக நெல்சன் மண்டேலா தோன்றினார். இருபத்தாறு ஆண்டுகள் கொடும் சிறையில் இருந்தபோதும், கல்லுடைக்கும் தண்டனை கைதியாய் சிறையில் துயரப்பட்ட போதிலும் அவர் மக்களை நேசிக்கவும் தவறவில்லை; விடுதலைக்கான பாதையில் வழுவவுமில்லை.

கடும் குளிரிலும் அரைக்கால் சட்டை அணிந்த கைதியாக இருந்த அவர் சிறைச் சூழலில் காணப்பட்ட தட்பவெப்ப நிலையை சமாளிப்பதற்க் கேற்ற நீண்ட கால்சட்டையை தமக்குத் தருமாறு மண்டேலா கோரினார். அவரது நீண்ட போராட்டத்தின் பின்பு அவருக்கு மட்டும் நீண்ட காற்சட்டையை சிறை அதிகாரி வழங்கிய போது இத்தகைய நீண்ட காற்சட்டை அனைத்து கைதிகளுக்கும் வழங்கப்படுமா என்று மண்டேலா கேட்டார். அவ்வாறு இல்லை. அது உனக்கு மட்டும்தான் வழங்கப்படும். அவர்களுக்கு இந்த நீண்ட காற்சட்டை வழங்கப்பட மாட்டாது என சிறைஅதிகாரி மண்டேலாவிடம் கூறிய போது ஏனைய சிறைக்கைதிகளுக்கு வழங்கப்படாத நீண்ட காட்சட்டை தனக்கு வேண்டாம் என்று நிராகரித்தார்.



இவ்வாறு இன்னொருமுறை மண்டேலாவின் பிறந்தநாளன்று பிறந்தநாளை மண்டேலா கொண்டாடுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளை ஆட்சியாளர் செய் திருந்தனர். ஆடை மற்றும் சிற்றுண்டிகளென தேவையான ஏற்பாடுகள் பெரிதாகச் செய்யப்பட்டன. அவ்வாறு ஏனைய கைதிகளும் தங்கள் தங் கள் பிறந்த நாள்களை கொண்டாடுவதற்கு ஏற் பாடுகள் இல்லாத இடத்து தனக்கு மட்டும் வழங் கப்படும் ஏற்பாட்டை அவர் முற்றிலும் நிராகரித்தார்.

உண்மையில் மண்டேலா அனைத்து தென்னாபிரிக்க மக்களினதும் தேசபிதாதான்.

மண்டேலா ஜனாதிபதியாக இருக்கும் போது ஒருமுறை உணவு அருந்துவதற்காக உணவு விடுதி ஒன்றிற்கு சென்றிருந்தார். அங்கு ஒருவர் தனியே அமர்ந்திருந்து உணவருந்துவதைக் கண்டார். தம்முடன் சேர்ந்து உணவருந்த வருமாறு அவரை அழைத்தார். அவ்வாறு வந்து ஒன்றாக உணவருந்த அமர்ந்த அந்த நபர் மலேரியாக் காய்ச்சலால் பிடிக்கப்பட்டவன் போல் நடுங்கினார்.

அதனை மண்டேலாவின் உதவியாளர் மண்டேலாவிடம் சுட்டிக்காட்டிய போது அவருக்கு உண்மையில் மலேரியா காய்ச்சல் இல்லை. இவர் சிறை அதிகாரியாக இருந்த போது நான் இவரிடம் குடிக்க தண்ணீர் கேட்டேன். அவர் எனக்கு சிறுநீரை கொடுத்தார்.இப்போது ஜனாதிபதியாக இருக்கும் நான் தன்னை பழிவாங்குவேனோ என்று அஞ்சி அவர் நடுங்கிறார். என்று விளக்கினார் மண்டேலா.

வெள்ளையின ஆதிக்கத்திலிருந்து கறுப்பின மக்களுக்கு விடுதலை கிடைத்ததும் தமக்குத் தீங்கிழைத்த வெள்ளை இன வெறியர்களை பழிவாங்கும் படலத்தை கறுப்பின மக்கள் ஆரம்பித்தனர். அப்போது மண்டேலா பின்வருமாறு கூறி வெள்



ளையின அழிப்பு இரத்தக் களரியை நிறுத்துமாறு மக்களிடம் வேண்டினார்.

"என்னால் அவர்களை மன்னிக்க முடியுமென்றால் உங்களால் அது ஏன் முடியாது?" – வெள்ளை இனவெறியர்களின் கொடும் சிறைச்சாலையில், அந்த இன வெறியர்களின் கையில் இருபத்தாறு ஆண்டுகளாக சித்திரவதை அனுபவித்த மண்டேலா இவ்வாறு மக்களைப் பார்த்து கேள்வி எழுப்பினார்

இவ்வாறு வெள்ளை இன வெறியர்களின் கையில் இருபத்தாறு வருட சிறை வாசத்தின் போது சித்திரவதைகளை அனுபவித்த மண்டேலாவினால் அந்த வெள்ளையர்கள்

உட்பட அனைத்து மக்களுக்குமான தந்தைக்குரிய ஸ்தானத்துடன் நவீன தென்னாபிரிக்காவுக்கு இவ்வாறு தலைமை தாங்க முடிந்தது.

60 வீத தென் ஆப்பிரிக்க மக்களை வீடற்ற தெருவோரவாசிகளாக விட்டுச் செல்வதாகக் கூறி தனது அந்திமக் காலத்தில் மக்கள் பற்றிய வேதனையுடன்தான் மண்டேலா காலமானார். உண்மையிலேயே மண்டேலா தென்னாபிரிக்க மக்கள் பொறுத்து அனைத்து மக்களுக்குமான தந்தைக்கும் தாய்க்கும் உரிய ஸ்தானத்துடன் காணப்பட்டார். இன்னொரு படி மேற்சென்று சொல்வதென்றால் அவர் தென்னாபிரிக்க மக்களின் தந்தையாக மட்டுமன்றி உலகலாவிய அனைத்து கறுப்பின மக்களின் விடுதலை வீரனாகவும் கறுப்பின மக்களின் கௌரவத்திற்கான குறியீடாகவும் விளங்கியமையுடன் உலகளாவிய அர்த்தத்தில் ஒடுக்கப்படும் இனங்களின் விடுதலை வீரனாகவும் ஜனநாயகத்தின் குரலாகவும் விளங்குகிறார்.

மேற்கூறியபடி தாய் யானை குட்டி யானையின் மீது காட்டும் அன்புக்கும், அக்கறைக்கும், பரிவுக்கும் நிகராக தேசபிதாக்களின் பாத்திரம் அமைய வேண்டியது அவசியம்.

ஆனால் இதற்கு நேர் எதிர்மாறாகத் தன் இனத்தை உண்ணும் தன்னின உண்ணிப் பிராணிகளான (Cannibals) பாம்பினத்தைப் போல, தன்னினக் குட்டிகளை உண்ணும் துருவக் கரடிகள் போல காணப்படும் தலைவர்களும் உலகில் உண்டு.

முள்ளிவாய்க்கால் இரத்தத்தை குடித்து கொளுத்து வாழும் தலைவர்களும் தன்னினத்தை விற்றுப் பிழைக்கும் தலைவர்களும் தமிழ் மக்கள் மத்தியில் இல்லாமல் இல்லை. முள்ளிவாய்க்காலின் பின்னான கடந்த 10 ஆண்டுகால தமிழ் அரசியலானது தோல்வியின் வரலாற்றை மீண்டும் கல்லுளி கொண்டு எழுதியுள்ளது.

உண்மையான தந்தைக்கும் தாய்க்கும் உரிய பாத்திரத்தை வகிக்கவல்ல தமிழ் தலைவர்களுக்காக தமிழினம் காத்துக்கிடக்கிறது.

விலைபோகும் தலைவர்களுக்கும், தன்னின உண்ணி தலைவர்களுக்கும், கண்மூடித்தனமான தலைவர்களுக்கும், முற்கற்பிதங் கொண்ட அறிவியற் பார்வையற்ற தலைவர்களுக்கும் பதிலாக அறிவார்ந்த, போர்க்குணமிக்க, அர்ப்பணிப்புடன் செயற்படவல்ல, தந்தைதாய் இயல்புடன் தலைமை தாங்கவல்ல தலைவர்களுக்காக தமிழினம் காத்துக் கிடக்கின்றது. இது வெறும் கற்பனை அல்ல. முள்ளிவாய்க்கால் பேரழிவும் பெரும் துயரமும் இத்தகைய தலைவர்களை பிரசவிக்கவல்ல உலைக்களமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஆயினும் வரலாற்றில் பேரழிவுகளுக்கு உள்ளாகிக் காணப்படக்கூடிய ஒரு சமூகம் உடனடியாக சீரழிவின் பின்னணியில் வாழநேர்வது வரலார்று இயல்பு. ஆதலால் அக்காலகட்டத்தில் தற்காலிகமாக புல்லுருவிகளும் குருவிச்சைகளும் முளைத்தெழுவதும் வரலாற்றியல்பு.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

## வன்னிப் பகுதியில் அடிக்கடி வீதி உலா வரும் யானை!

வவுனியா, புளியங்குளம், பரந்தன் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை வீதியில் உலா வந்த யானையால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

புளியங்குளம் - நெடுங்கேணி வீதியில் உள்ள பரந்தன் பகுதியில் யானை ஒன்று வீதிக்கு வந்தது. இதனால் அவ்வீதி வழியாக போக்குவரத்து செய்த பயணிகள், வாகன சாரதிகள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

அவ்வப்போது மாலை வேளைகளில் இந்த வீதிக்கு யானை வருவதால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஆளுங்கட்சி தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஆமாம் சாமி போடுவதே ஒரே கொள்கை

### சாடுகின்றார் வேலுகுமார் எம்.பி.



கொழும்பு, பெப். 10

சலுகைகளுக்கு அடிபணிந்து விலைபோயுள்ள ஆளுங்கட்சியிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் ஆமாம் சாமி போடுவதையே அரசியல் கொள்கையாக ஏற்று செயற்பட்டுவருகின்றனர் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு கொங்றீட் இடப்பட்ட கம்பளை, அம்புலுவாவ ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கான பாதை மக்கள் பாவனைக்கு நேற்று கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே வேலுகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு–

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஆளுங்கட்சியில் நாமும் பங்காளிகளாக அங்கம் வகித்தோம். ஆனால், ஒருபோதும் ஆமாம் சாமி போடும் அரசியலை நடத்தவில்லை.

அநீதி இழைக்கப்படுமானால், தவறுகள் இடம் பெறுமானால் அரசாங்கத்துக்குள் இருந்தபடியே அவற்றுக்கு எதிராக குரல் கொடுத்து, நீதிக்காக போராடினோம்.

அதுமட்டுமல்ல தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் துணிந்து செயற்பட்டோம். அபிவிருத்தி அரசியலுக்கு சமாந்தரமாக, உரிமை அரசியலுக்கும் முன்னுரிமை வழங்கினோம்.

ஆனால், இன்று ஆளுங்கட்சியிலுள்ள தமிழ் அமைச்சர்கள் 'ஊமை வேடம்' தரித்தவர்களாகவே வலம்வருகின்றனர். அரசாங்கம் எதனை செய்தாலும் தலையாட்டி பொம்மைபோல் தலையாட்டுகின்றனர்.

தேசிய சுதந்திர தினத்தில் இம்முறை தமிழ் மொழியில் தேசியகீதம் இசைக்கப்படவில்லை. அமைச்சரவையில் இரண்டு தமிழ் உறுப்பினர்கள் இருக்கின்றனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். இந்நிலையில் இதற்கு எதிராக குறைந்தபட்ச எதிர்ப்பைக்கூட அவர்களால் வெளியிடமுடியாத நிலை ஏற்பட்டது.

மலையகத்தில் இன்று தனிவீட்டுத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனைகூட தொடரமுடியாதவர்களாகவே இருக்கின்றனர். இப்படியான தமிழ் அரசியல்வாதிகள் ஒருபோதும் உரிமை அரசியலுக்கு முன்னுரிமை வழங்கப்போவதில்லை. எனவே, தமிழ் மக்கள் விழிப்பாக இருந்து – சிந்தித்து முடிவெடுக்கவேண்டிய தருணம் உதயமாகியுள்ளது. என்றார்.

## தொலைபேசி உரையாடல் சர்ச்சை: ஐ.நா.அமைப்பிடம் ஹிருணிகா புகார்



கொழும்பு,பெப்.10

தனது தனிப்பட்ட தொலைபேசி உரையாடலைத் திரிபுபடுத்தியமை மற்றும் பகிரங்கப்படுத்தியமை சம்பந்தமாக குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் தாம் செய்த முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தப்படாமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனை தவிர ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கும் எழுத்து மூலமும் அறிவித்துள்ளார்.

இந்தத் தொலைபேசி உரையாடல் பகிரங்கப்படுத்தப்பட்டமையால், தனக்கும் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் தனக்கு சமூக ஊடகங்கள் வாயிலாக கொலை அச்சுறுத்தல் கூட விடுக்கப்பட்டுள்ளதாகவும் ஹிருணிகா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த ஜனவரி 23 ஆம் திகதி ஹிருணிகா இந்த சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்திருந்தார்.

## இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை சனியன்று சந்தித்தார் பிரதமர் மஹிந்தர்!

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை நேற்றுமுன்தினம் மாலை புதுடெல்லியில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் பேசியுள்ளனர்.










## சிலாவத்தையில் குண்டுவெடித்த வீட்டிலிருந்து வெடிபொருள்கள்

முல்லைத்தீவு சிலாவத்தையில் நேற்று முன்தினன் குண்டுவெடிப்பு இடம்பெற்ற வீட்டிலிருந்து சுமார் மூன்று கிலோவுக்கு அதிகமான வெடிமருந்துப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, வீட்டு உரிமையாளரான பெண்ணும், அவரது மகனும் கைது செய்யப்பட்டனர்.

குண்டுவெடிப்பில் காயமடைந்த நபர், தொடர்ச்சியாக இந்த வெடி பொருள்களிலிருந்து மருந்துகளை பிரித்தெடுத்து வியாபாரம் செய்த ஒருவராக இருந்திருக்க வேண்டும் எனவும், இவ்வாறான நிலையிலேயே அன்றும் குண்டு ஒன்றிலிருந்து மருந்தை பிரித்தெடுக்க முற்பட்ட நிலையிலேயே குண்டு வெடித்து இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்த வெடி மருந்துகளுடன் சம்பந்தப்பட்ட இந்த வியாபாரத்தில் சந்தேகம் கொண்ட பொலிஸார் காயமடைந்த நபரின் தாயாரான அந்த வீட்டின் உரிமையாளர் மற்றும் காயமடைந்த நபருடைய சகோதரன் ஆகிய இருவரையும் கைது செய்துள்ளனர்.

மேலும் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். விசேட அதிரடிப்படையினரால் அவர்களுடைய வீடுகளைச் சோதனை செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்



# கோபத்தில் நடுவரிடம் கொந்தளித்த கோஹ்லி

நியூசிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணித்தலைவர் கோஹ்லி நடுவரிடம் கோபப்பட்டுக் கத்தியமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாவது ஒரு நாள் போட்டியில் தோல்வியை தழுவிய இந்திய அணி, 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 2 – 0 என இழந்தது.

போட்டியின்போது நியூசிலாந்து துடுப்பாட்டகாரர் நேரம் முடிந்த பிறகு டி.ஆர்.எஸ். கேட்டு, அது மறுஆய்வு அனுமதி வழங்கப்பட்டதால் கோபமடைந்த கோஹ்லி களநடுவரிடம் கொந்தளித்தார்.

நியூசிலாந்து இன்னிங்ஸின் போது 16ஆவது ஓவரை இந்திய வீரர் சஹால் வீசினார். 5ஆவது பந்தில் துடுப்பாடிய நியூசிலாந்து வீரர் ஹென்றி நிக்கோல்ஸில் துடுப்பில் பட்டது. சஹால் உட்பட இந்திய வீரர்கள் முறையிட நடுவர் அவுட் என காட்டினார்.

இதனையடுத்து, டி.ஆர்.எஸ். நேரம் வழங்கப்பட்டது. கடைசி நொடி முடிந்த பிறகு நிக்கோல்ஸ் மறுஆய்வுக்கு அழைப்பு விடுக்க, அதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு 3ஆவது நடுவர் விக்கெட்டை ஆய்வு செய்தார்.

இதனால், கோபமடைந்த கோஹ்லி கள நடுவர் புரூஸ் ஆக்ஸன்போர்ட்யிடம் கொந்தளித்தார். இறுதியில் வீடியோவை ஆய்வு செய்த 3ஆவது நடுவர் ‘அவுட்’ என அறிவித்தார்.

நிக்கோல்ஸ் 41 ஓட்டங்களில் நடையை கட்டினார். இந்திய அணி முதல் விக்கெட்டை சாய்த்தது.

# ‘ஹட்ரிக்’ வெற்றியுடன் ஒருநாள் தொடரை கைப்பற்றியது நியூஸி.!

ஜேமிஸன், சௌதி ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சால் ஒக்லாந்தில் பகலிரவாக நடந்த 2வது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியை 22 ஓட்டங்க்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து ஒருநாள் தொடரை வென்றது நியூஸிலாந்து அணி.

முதலில் ஆடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 273 ஓட்டங்கள் சேர்த்தது. 274 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 48.3 ஓவர்களில் 251 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து தோல்வி அடைந்தது.

நியூஸிலாந்து அணியில் அறிமுகமாகிய 6.8 அடி உயரமுள்ள வேகப்பந்துவீச்சாளர் ஜேமிஸன் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

உலகக்கிண்ண அரையிறுதியில் இருந்து தொடர்ந்து இந்திய அணிக்கு எதிராக நியூஸிலாந்து அணி பெறும் ஹட்ரிக் வெற்றியாகும். அதேசமயம், ரி20 தொடரை இழந்ததற்கு இந்திய அணியை பழிதீர்த்துக் கொண்டது நியூஸிலாந்து அணி.

கப்டன் வில்லியம்ஸன், பெர்குன், டிரன்ட் போல்ட் ஆகிய முக்கிய வீரர்கள் இல்லாத நிலையில் ஒருநாள் தொடரில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது நியூஸிலாந்து அணி.

இந்திய அணியின் முக்கிய வீரர்களான பிரித்வி ஷா (24), அகர்வால் (3), விராட் கோஹ்லி (15), ராகுல் (4), கேதார் ஜாதவ் (9) போன்றவர்களை கச்சிதமாக வீழ்த்தியது நியூசிலாந்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாகக் கூறலாம். அதேசமயம், டெய்லண்டர்களான ரவிந்திர ஜடேஜா, ஸைனியின் ஆட்டம் உண்மையில் பிரமிக்கவைக்கும் விதத்தில் இருந்தது.

வேகப்பந்துவீச்சாளராக மட்டுமே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருந்த ஸைனி இந்த ஆட்டத்தில் 2 சிக்ஸர்கள் 5 பவுண்டரிகள் உள்ளிட்ட 45 ஓட்டங்கள் சேர்த்து நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளார்.

ரவிந்திர ஜடேஜா தன்னை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தன்னை ஓல்ரவுண்டர் என்பதை அழுத்தமாக பதிவு செய்து வருகிறார். தன்னை அணியில் இருந்து எடுக்க முடியாத அளவுக்கு துடுப்பாட்டம், பந்துவீச்சு, பீல்டிங்கிலும் முத்திரை பதித்து வருகிறார். பந்துவீச்சில் மிகச்சிக்கனமாக ரன்கள் வழங்கும் ஜடேஜா, தனக்கு கிடைக்கும் வாய்ப்புகளில் எல்லாம் ஸ்கோர் செய்து வருகிறார்.



உலகக்கிண்ணப் போட்டியில் நடந்த அரையிறுதிப் போட்டியைப் போன்று மற்றொரு அரையிறுதிப் போட்டி போன்றுதான் இது அமைந்திருந்தது. ஆனால், இதில் டோனி மட்டும்தான் மிஸ்ஸிங் என்ற நினைப்பு இருந்தது.

அதிலும் இந்திய அணி 153 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை எடுத்து திணறியபோது, ஸைனியும், ஜடேஜாவும் சேர்ந்து அமைத்துக் கொடுத்த பாட்னர்ஷிப் மிக அருமை. இருவரின் ஆட்டமும், நியூஸிலாந்து அணியிடம் இருந்து வெற்றியைப் பறித்துவிட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால், ஸைனியின் விக்கெட் வீழ்ந்தது ஆட்டத்தின் போக்கை மாற்றியது.

நியூஸிலாந்து அணியைப் பொறுத்தவரை 6.8 அடி உயரமுள்ள ஜேமிஸன், சௌதி, கிராண்ட்ஹோம், பென்னட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு முக்கியக் காரணமாக அமைந்தனர்.

இந்திய அணியில் அதிகபட்சமாக ஸ்ரேயாஸ் அய்யர் (52), ரவிந்திர ஜடேஜா 55, ஸைனி 45 ஓட்டங்கள் சேர்த்தனர். மற்ற வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

முன்னதாக நியூஸிலாந்து அணி முதலில் ஆடியது. கப்தில் (79), நிக்கோல்ஸ் (41) இணைந்து 16.5 ஓவர்களில் முதல் விக்கெட்டுக்காக 93 ஓட்டங்களைச் சேர்த்தனர். அதன் பிறகு 142/1 என்ற நிலையிலிருந்து அடுத்த 55 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை நியூஸிலாந்து பறிகொடுத்தது.

இதற்கு ஷர்துல் தாக்கூரின் அபார பீல்டிங்கினால் ஒரு ரன் அவுட்டும், ஜடேஜா மிகப்பிரமாதமாக ஒருகையில் நேராக ஸ்டம்பை அடித்து நீமை ரன் அவுட் செய்தமையும் காரணமாகும். இதுதவிர சாஹல் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்ற ஜடேஜா அதி முக்கிய விக்கெட்டான றொம்லதமை எல்.பி. செய்ய நியூஸிலாந்து வீழ்ச்சியின் விளிம்பில் இருந்தது.

நியூஸிலாந்து அணி 8வது விக்கெட்டை 197 ரன்களில் இழக்கும் போது 47 பந்துகளில் 29 ஓட்டங்கள் என்று இருந்த ரோஸ் றெய்லர் கடைசியில் 74 பந்துகளில் 6 பவுண்டரிகள் 2 சிக்சர்களுடன் 73 ஓட்டங்கள் எடுத்து நொட் அவுட்டாகத் திகழ்ந்தார்.

மார்டின் கப்தில் தொடக்கத்தில் அபாரமான சில ஷொட்களை ஆடினார். பும்ரா 10 ஓவர்களில் 64 ஓட்டங்களை விட்டுக் கொடுத்ததில் 6 பவுண்டரிகள் 2 சிக்சர்களை விட்டுக் கொடுத்தார். இதில் 25 டொட் போல்கள் என்றால் 60 பந்துகளில் 25 பந்துகள் ஓட்டம் இல்லை. மீதி 35 பந்துகளில் 64 ஓட்டங்கள் என்பது கிட்டத்தட்ட பந்துக்கு 2 ஓட்டங்கள் பக்கம் கொடுத்துள்ளார். அதாவது ஸ்மார்ட் சிக்கன விகிதத்தின் படி பார்த்தால், 25 டொட்போல்களை வீசியவர் 35 பந்துகளில் 64 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருக்கிறார்.

இவரைவிடவும் ஷர்துல் தாகூர் நன்றாக வீசினார். முதல் போட்டியை ஒப்பிடும்போது தாக்குர் முதல் ஸ்பெல்லை நன்றாகவே வீசினார். ஆனால் கடைசியில் அவரும் 10 ஓவர் 1 மெய்டன் 60 ஓட்டங்கள் 2 விக்கெட் என்று ஆனார். 60 பந்துகளில் 34 டொட்போல்களை வீசியவர் 26 பந்துகளில் 60 ஓட்டங்கள் என்பது 200 ஐயும் தாண்டிய ஸ்ட்ரைக் விகிதமாகும். இதுவும் மோசமான திட்டமிடல் இல்லாத பந்து வீச்சே.

நவ்தீப் சைனி தன் வேகத்தினால் மிரட்டினார். மணிக்கு 144 – 145 கி.மீ வேகத்தில் வீசி அவர் 10 ஓவர் 48 ஓட்டங்களையே கொடுத்தாலும் ஸ்மார்ட் விகிதத்தின் படி 36 டொட்போல்களை நீக்கி விட்டு பார்த்தால் 24 பந்துகளில் 5 பவுண்டரி 1 சிக்சருடன் 48 ஓட்டங்களை விட்டுக்கொடுத்துள்ளார்.

சாஹல் 55 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை கைப்பற்றினாலும் பிக் ஓப் த பவுலர் என்று பார்த்தால் ஜடேஜாதான் 10 ஓவர் 35 ஓட்டம் 1 விக்கெட். 34 டொட்போல்களை கழித்து விட்டால் 26 பந்துகளில் 35 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்துள்ளார். இதுதான் போர்முலா. இப்படி அனைவரும் வீசியிருந்தால் நியூஸிலாந்து அணி 200 – 220 ஓட்டங்கள்தான்.

# ஓய்வுக்குப் பின்னரும் கூட நியூசிலாந்து அணிக்காக களமிறங்கிய பயிற்சியாளர்!



நியூசிலாந்து அணியில் உடல் நலக்குறைவால் வீரர்கள் அவதிப்பட்டு வருவதால், அந்த அணியின் களத்தடுப்புப் பயிற்சியாளர் களமிறங்கி விளையாடியுள்ளார்.

இந்தியா – நியூசிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டியானது ஆக்லாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் சிறப்பாக பந்துவீசிய நியூசிலாந்து அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 2 – 0 என்கிற கணக்கில் முன்னிலை பெற்றது.

போட்டிக்கு முன்னதாக ஸ்காட் குகலீஜ்ன் காய்ச்சலாலும், மிட்செல் சாண்ட்னர் வயிற்று வலியாலும் பாதிக்கப்பட்டதால் உடை மாற்றும் அறையில் ஓய்வில் இருந்து வருகின்றனர்.

இதனால் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற நியூசிலாந்து வீரரும், களத்தடுப்புப் பயிற்சியாளருமான லூக் ரோஞ்சி 37 வது ஓவரில், சொந்த அணிக்காக மீண்டும் களமிறங்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டார்.

அவர் இறுதியாக 2017ஆம் ஆண்டு விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் கிரிக்கெட் வீரருக்கு 17 மாதங்கள் சிறைத் தண்டனை!

பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டியில் சகவீரர்களை மட்ச் பிக்ஸிங், ஊழலில் ஈடுபடத் தூண்டிய பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் நசீர் ஜாம்ஷெட்டுக்கு 17 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பான வழக்கு இங்கிலாந்தின் மான்செஸ்டர்நகரநீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் ஜாம்ஷெட் மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு இப்போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகள் இருவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால் பிரிட்டிஷ் நஷனல் கிரைம் ஏஜென்ஸி விசாரித்து வந்தது.

கடந்த 2016ஆம் ஆண்டு பங்களாதேஷ் சூப்பர் லீக், 2017ம் ஆண்டு பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டியில் சக வீரர்களை மட்ச் பிக்ஸிங், ஊழலில் ஈடுபடத் தூண்டினார் என ஜாம்ஷெட் மீது புகார் எழுந்தது. இதைத் தொடர்ந்து கடந்த 2017 பெப்ரவரி மாதம் ஜாம்ஷெட், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த யூசுப் அன்வர் (36), முகமது இசாஜ் (34) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட அன்வர், இஜாஸ் இருவரும் பாகிஸ்தான் வீரர்களுக்குப் பணம் கொடுத்து மோசமாக விளையாடத் தூண்டினோம், மட்ச் பிக்ஸிங் ஈடுபட முயன்றோம் எனும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனால், இஜாசுக்கு 30 மாதங்களும், அன்வருக்கு 40 மாதங்களும் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

பி.எஸ்.எல். கிரிக்கெட் போட்டியில் தான் மட்ச் பிக்ஸிங்கில் ஈடுபடவில்லை என்று தொடக்கத்தில் கூறிவந்த ஜாம்ஷெட் பின்னர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

ஏற்கனவே கடந்த 2018ம் ஆண்டில் வீரர்களிடையே கையூட்டு பெறுவதை ஊக்கப்படுத்திய குற்றத்துக்காக 10 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாட ஜாம்ஷெட் தடைவிதிக்கப்பட்டார். அதற்கு முன்பாக 2017 ஆம் ஆண்டில் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்த குற்றத்துக்காக 12 மாதங்கள் தடையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விதித்தது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் அணியின் இடதுகை ஆட்டக்காரரான ஜாம்ஷெட் 2 டெஸ்ட், 48 ஒருநாள் போட்டிகளிலும், 18 ரி20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார். 48 ஒருநாள் போட்டிகளில் 1418 ஓட்டங்களும் சேர்த்துள்ளார்.

## தெளிந்த தமிழ்த் தேசியப் பார்வையும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடனகூடவே தன்னின உண்ணிப் பிராணிகளும்தலையெடுக்கும். ஆனாலும் இவற்றை எல்லாம் கடந்து கடினமான பாதையில்வரலாறு முன்னேறி உள்ளதை கடந்தகால வரலாறு நிகழ்வுகள் உலகெங்கும் நிரூபித்துள்ளன.

இத்தகைய இரண்டக நிலையில் இவற்றை எல்லாம் கடந்து புத்திபூர்வமாக அரசியலை முன்னெடுக்கவல்ல தலைவர்களையும் அறிஞர்களை யும், கலைஞர்களையும், ஊடகவியலாளர்களையும், பண்பாட்டுப் பணியாளர்களையும் வேண்டித் தமிழினம் காத்துக்கிடக்கிறது.

முக்கிய தமிழ் தலைவர்கள் எதிரிக்கு சேவைசெய்யும்வகையில்தமிழ்மக்களின் நலன்களுக்கு எதிர் வளமாகத் தம்மை நிரூபித்துள்ளநிலையில்மாற்றுத்தலைமை பற்றிப் பேசியவர்கள் தம் மத்தியில் காணப்படும் இழுபறிகளையும் இயலாமைகளையும் கடக்கவல்ல வகையில் தம்மை சுய விமர்சனம் செய்து , புடமிட்டு, ஐக்கியப்பட்ட, பலம்வாய்ந்த இடைக் காலத் தமிழ் தலைமையை உருவாக்கத் தவறினால் தமிழ் மக்களை தோல்வியிலும் அழிவிலுமிருந்து மீட்க உடனடியாக வேறு வழி எதுவும் இல்லாமல் போகும்.

தூரத்து இடி முழக்கம் என நீண்டகால பெரும் இலட்சியங்களை பற்றிப் பேசி அவற்றின் பெயரால் அடிபட்டு துண்டுபடுவதற்கு பதிலாக உடனடி இருப்பை நிலைநாட்ட வல்ல, சாத்தியமான, குறுங்கால இலக்குகளை அடையவல்ல, கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பரந்துபட்ட ஒரு பொது கூட்டுக்கு அனைவரும் தயாராக வேண்டும். தற்போதைய உடனடி நிபந்தனை சிங்கள குடியேற்றங்களைத் தடுப்பதும் அனைத்து வழிகளிலும் பௌத்த சிங்களமயமாக்கல்களுக்கு எதிராக போராடுவதுமாகும்.

இவ்வாறு உடனடிப் பிரச்சனைகளுக்காக நேரடிப் போராட்டங்களில் ஈடுபடுவதன் மூலமே சிங்கள இன மயமாக்கலை தடுக்கவும் சர்வதேச கவனத்தை மேலும் மேலும் தமிழ் மக்களின் பிரச்சினையின் பால் ஈர்க்கவும் முடியும்.

இப்போதைய பிரதான கேள்வி மாற்றுத் தலைமை பற்றிப் பேசுபவர்களைப் பார்த்தே எழுகிறது . மேற்படி போராடுவதற்கு பொருத்தமான வகையில் ஓர் இடைக்கால தலைமையாக பரந்துபட்ட ஐக்கிய முன்னணி ஒன்றை உங்களால் உருவாக்க முடியுமா இல்லையா என்பதுதான் அந்தக் கேள்வியாகும். இந்த நெருக்கடி நிறைந்த இக்காலகட்டத்தில் குறைந்தபட்சம் ஒன்றுபட்ட ஓர் இடைக்காலத் தலைமையையாவது உருவாக்குவதற்கான ஆளுமையையும் அறிவார்ந்த அணுகுமுறையையும் உங்களால் காட்ட முடியுமா? இல்லையா?

கனி
நன்றி - கூர்மை இணையம்

## விசுவமடு விபத்தில் மாணவி காயம்

முல்லைத்தீவு, பெப்.10

முல்லைத்தீவு - விசுவமடு, ஏ -35 வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதி விபத்தில் மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவில் இருந்து ஏ - 35 வழியாக அதிவேகமாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று விசுவமடு சந்திக்கு அண்மித்த பகுதியில் தனியார் கல்வி நிலையத்திற்கு துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த மாணவி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் துவிச்சக்கர வண்டி யில் பயணித்த மாணவியே படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# நீதியரசர் விக்னேஸ்வரன் உறுதிபடத் தெரிவிப்பு

## பலமானதொரு கூட்டணியாக மாற்று அணி உருவாகிவிட்டது

**'தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி'யின் உருவாக்கம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் பூர்வாங்கக்கூட்டம் நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ் டில்கோ ஹோட்டலில் நடைபெற்றபோது வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் முழு வடிவம் வருமாறு:-**



**அன்புடைய என் தமிழ் மக்களே!**

உங்கள் நீண்டகால எதிர்பார்ப்பான மாற்று அணி உருவாகிவிட்டது. எமது புரிந்துணர்வு உடன்படிக்கை எனதருமை மக்களான உங்கள் முன்னிலையில்!கைச்சாத்திடப்பட்டுள்ளது. பலமானதொரு கூட்டணி பரிணமித்துள்ளது.

ஒரு சில தனி நபர்களின் விருப்பு, வெறுப்புக்கள், பதவி மோகங்களுக்கு அப்பால் தமிழ் தேசிய அரசியலை கொள்கை அடிப்படையில் நிறுவனமயப்படுத்தி அகத்திலும் புலத்திலும் உள்ள சாதாரண மக்கள் முதல் புத்திஜீவிகள் வரை அனைவரையும் உள்வாங்கி முன்னெடுத்து செல்வதற்கு மாற்று அரசியல் கூட்டணி ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற ஒட்டுமொத்த வடக்கு, கிழக்கு மக்களினதும் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் நீண்ட பயணத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நன்னாளாக இன்றைய நாள் அமைகின்றது. இதனை சீரிய முறையில் முன்னெடுத்துச்செல்லவேண்டிய பணி உங்கள்அனைவரையும்சாரும். குறிப்பாக இளையோர்கள் கைகளில் இது தங்கியுள்ளது.

நான் முதலமைச்சராக இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் முரண்பட்டுக்கொண்டிருந்த போதே, எனது தலைமையில் மாற்று அணி ஒன்றை உருவாக்கும் எதிர்பார்ப்புக்கள் மக்கள் மத்தியில் மட்டுமன்றி, தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து கொள்கை முரண்பாடு காரணமாக விலகித் தனித் தனியாக செயற்பட்டுவந்த கட்சிகள் மத்தியிலும் ஏற்பட்டிருந்தன. இதன் அடிப்படையில்தான் நான் தமிழ் மக்கள் கூட்டணியை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 அன்று உருவாக்கி இருந்தேன்.

அன்றைய தினம் "தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியை ஆரம்பிக்கப்போகிறேன்" என அறிவிப்பு வெளியிட்டு நான் ஆற்றிய உரையில் –

*"அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்து, தமிழ் தேசியக் கோட்பாடுகளின்பால் பற்றுறுதியுடன் இருக்கும் அனைவரையும் ஒன்றிணைத்து, ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாட்டை முன்னெடுக்குந் தெரிவு சிறந்ததும் அவசியமானதும் என்று உணர்கின்றேன். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் பல தமிழ் புத்திஜீவிகளும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் களும் 'இது காலத்தின் அவசியம்' என்றும்எனதுகடமைஎன்றும்உணர்த்தியுள்ளமையுடன் தமது ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளனர். எல்லாவ வற்றுக்கும் மேலாக, நான் சந்தித்த ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இந்தக் கோரிக்கையைத்தான் என் னிடம் விடுத்து வந்திருக்கின்றார்கள். நீங்கள் விரும் பியபடியே எனது அரசியல் பயணம் தொடரும். என்னை நம்பிய எனது மக்களுடன் இறுதிவரை வாழ்ந்து அவர்களுக்காகப் பணி செய்வது என்று முடிவுசெய்துள்ளேன்"* – என்று குறிப்பிட்டிருந்தேன்.

அன்று முதல் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைமையில் மாற்று அணி எப்போது உருவாகும் என்பதே வடக்கு கிழக்கில் உள்ள எல்லா மக்களினதும், புத்திஜீவிகளினதும், பொது அமைப்புக்களினதும், ஊடகங்களினதும் எதிர்பார்ப்பாக இருந்து வந்திருக்கின்றது. எப்போது வரும் என்று ஊடகங்கள் கேட்டபோது மக்களே அதைத் தீர்மானிப்பார்கள் என்று பதில் இறுத்துள்ளேன். மக்களின் முடிவு இன்று அரங்கேறுகின்றது.

வெறுமனே தேர்தலை வெற்றிகொள்ளும் நோக்கத்துடன் இந்த கூட்டணியை நான் அமைக்கவில்லை. பதவியும் சலுகைகளும் முக்கியம் என்று நான் நினைத்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனேயே ஒட்டிக்கொண்டிருந்திருப்பேன். அல்லது ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு கோரி கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆசை வார்த்தைகளுடன் தமது முகவர்களை அனுப்பியபோது சோரம் போயிருப்பேன். அல்லது பிரிந்து சென்ற அனைவரும் மீண்டும் வாருங்கள் என்று அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கோரிக்கை விடுத்தபோதும் 'ஒற்றுமை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி மீண்டும் அவர்களுடன் இணைந்திருப்பேன். பதவிகளும் சலுகைகளும் எனது நோக்கமல்ல.

தமிழ் மக்கள் கூட்டணியை அறிவித்து 2018 ஒக்டோபர் 24 ஆம் திகதி ஆற்றிய உரையின் இறுதியில் பின்வறுமாறு குறிப்பிட்டிருந்தேன்.

*"மக்கள் தந்த ஆணைதான் எனது மனசாட்சியாக இதுவரை இருந்து வந்துள்ளது. அவர்கள் அளித்த வாக்குகள் ல்தான் என் சக்தி. நம்பிக்கையுடன் வாக்களித்த மக்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ என்னால் துரோகம் செய்ய முடியாது. இதனை என் பலம் என்பர் சிலர். சிலர் பலவீனம் என்பர். இது பலமா, பலவீனமா என்பதை வரலாறு தீர்மானிக்கட்டும். ஒரு போதும் மக்கள் எனக்கு அளிக்கும் ஆணைக்கு விரோதமாக நடக்கமாட்டேன். மக்களின் ஆணைக்கு விரோதமாக நடந்துவிட்டு அதற்கு சாணக்கியம் என்றும் ராஜதந்திரம் என்றும் முகமூடிகளை அணிந்து கொள்ளமாட்டேன். எமது இனத்தின் வரலாறு எனக்கு வழிகாட்டும்"*– என்று கூறியிருந்தேன்.



இதன்படி, தமிழ் இனத்தின் வரலாறுதான் எனது அரசியலை வழிகாட்டி வருகிறது. இலங்கை பௌத்த நாடு என்று சிங்களத் தலைவர்கள் அப்பட்டமாகப் பொய் கூறியபோது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களைப் போல அரசுடனான எமது உறவு பாதிக்கும் என்றோ அல்லது சிங்கள நண்பர்கள் பகைத்துக்கொள்வார்கள் என்றோ சிங்கள அரசியல்வாதிகளுடன் எப்படி நாடாளுமன்றத்தில் தொடர்ந்து கூடிப்பழகுவது என்று நினைத்தோ 'சாணக்கியம்' என்ற சொல்லின் பின்னால் ஒளிந்து நின்று பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த எமது தமிழ் இனத்தின் வரலாற்றைக் காட்டிக் கொடுக்கும் வகையில் நான் மௌனியாக இருந்ததில்லை. நடந்தது இனப்படுகொலை தான் என்று கூறுவதற்கோ அல்லது சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டும் என்று வலியுறுத்துவதற்கோ நான் இரு தடவை யோசித்திருந்ததில்லை. சட்டம் எனக்கு அப்போது வழிகாட்டியது.

நல்லாட்சி அரசாங்கத்துக்கு எந்தப் பாதிப்பும் வரக்கூடாது என்பதற்காகவும், அரசுடனான தமது உறவு கெட்டுப்போகக்கூடாது என்பதற்காகவும், அவர்கள் காலத்தில் வராத ஒரு தீர்வுக்காகவும் விட்டுக்கொடுப்பு, நெகிழ்வுத்தன்மை, ராஜதந்திரம் என்ற வார்த்தைகளின் பெயரில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டமை, பௌத்த மதத்துக்கு முன்னுரிமையை ஏற்றுக் கொண்டமை, வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியம் இல்லை என்று ஒத்துக்கொண்டமை,வட்டுக் கோட்டை தீர்மானத்தைகைவிட்டமை, முள்ளிவாய்காலில் நடந்தது இன அழிப்பு அல்ல என்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பரப்புரை செய்தமை, சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்று கூறியமையே சிங்கள தலைவர்கள் இலங்கை ஒரு சிங்கள,பௌத்த நாடு என்றும் பெரும்பான்மை சிங்கள மக்கள் விரும்பாத ஒரு தீர்வினை சிறுபான்மை மக்கள் கேட்கக்கூடாது என்று துணிச்சலாக வெளியிடும் நிலைமையை இன்று ஏற்படுத்தி இருக்கின்றது.

இன்று இருக்கும் எல்லாத் தமிழ் தலைவர்களை விடவும் சிங்கள நண்பர்களும், புத்திஜீவிகளும், அரசியல்வாதிகளும், உறவினர்களும் எனக்கு அதிகம். ஆனால், அவர்களுடனான எனது உறவு விரிசல் அடையும் என்றோ, சிங்கள பெண்களை மணம் புரிந்த எனது மகன்மாருக்கு அசௌகரியம் ஏற்படும் என்றோ நினைத்து நான் செயற்பட்டிருந் தால் இலங்கையின் மூத்த குடிகள் தமிழர்களே என்றும், தமிழில் இருந்துதான் சிங்கள மொழி பிற்காலத்தில் தோன்றியது என்றும், இலங்கை ஒரு சைவ நாடுஎன்றும்,தமிழர்கள்பிரிந்து செல்வதற்கு உரித்துடையவர்கள் என்றும் திரும்ப திரும்ப கூறிக் கொண்டிருக்க மாட்டேன். ஆகவே வரலாறுதான் என்னை வழிகாட்டிவருகின்றது.

எனது அன்புக்குப் பாத்திரமான எனது தமிழ் இனத்தின் வரலாற்றை காட்டிக்கொடுத்து ஒரு போதும் சாபத்தை நான் தேடிக்கொள்ள மாட்டேன்.

எனது பின்புலத்தின் அடிப்படையில் எனது வார்த்தைகளின் சக்தி என்ன என்பதை மதிப்பீடு செய்தே சிங்களத் தலைவர்களுடன் நான் வார்த்தைகளால் மோதிக்கொண்டிருக்கின்றேன்.

எனக்கு எவர் மீதும் வெறுப்போ வைரியமோ பயமோ இல்லை. அரசியலில் வார்த்தைகள் மிகவும் பலம் மிக்கவை. அதனால்தான் வார்த்தைகளினாலும் கருத்து வினைப்பாடுகளினாலும் மோதித்தமது அடை யாளத்தை நிறுவிக்கொள்வது சர்வதேச அரசியலி லும் சரி, உள்நாட்டு அரசியலிலும் சரி, அடிப்படையாக காணப்படுகின்றது.

இதனால் தான் அரசியலில்ஊடகங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்றது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு 2001 ஆம் ஆண்டு ஆற்றிய ஓர் உரையில் பின்வருமாறு கூறியிருந்தார்.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

# பலமானதொரு கூட்டணியாக...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

“நீ தேவதைகளின் பக்கம் நிற்கின்றாயா அல்லது பேய்களின் பக்கம் நிற்கின்றாயா என்பது முக்கியம் அல்ல. சர்வதேசப் பரப்பில் பொதுக. கருத்துக்காகப் போட்டிபோடும் எவரும் தனது செயலை நியாயப் படுத்த வேண்டும்.

“ஹிட்லர் தனது செயலை நியாயப்படுத்தினான். ஸ்டாலின் தனது செயலை நியாயப்படுத்தினான். அவர்கள் அனைவரிடமும் பரப்புரை இயந்திரங்கள் இருந்தன. நீ சரியோ, பிழையோ உனது செயலை நீ நியாயப்படுத்த வேண்டும்” – என்றார்.

முள்ளிவாய்க்காலில் சிங்களத் தலைவர்கள் பயன்படுத்திய உத்தி இதுதான். தமிழ் மக்களின் போராட்டதைப் பயங்கரவாதமாக முத்திரை குத்தி சர்வதேச நாடுகளின் ஆதரவை பெறுவதற்கும், சிங்கள மக்களின் ஆதரவை பெறுவதற்கும் சிங்கள தலைவர்கள் பயன்படுத்திய உத்தி இதுதான். இன்றும் எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்பு சார்ந்த, கலாசாரம் சார்ந்த, இனஅழிப்பின் பின்னணியில் உள்ள உத்தியும் இதுதான். இலங்கை ஒற்றை ஆட்சி என்று சொல்லப்படுவதும், இலங்கை பௌத்த நாடு என்று சொல்லப்படுவதும், சிங்களவர்கள் இலங்கையின் தேசிய இனம் என்று சொல்லப்படுவதும், சிங்களம் இலங்கையின் தேசிய மொழி என்று சொல்லப்படுவதும் வெறும் பதவி மோக அரசியல் வார்த்தைகள் அல்ல. அவை, தமிழ் மக்களுக்கு எதிரான அழிப்பு நடவடிக்கைகளின் உபாயங்கள். வாய்வழி வந்த நியாயப்படுத்தல்கள்.

ஆகவேதான் இவற்றுக்கு எதிராக மௌனிகளாக இருக்காமல் சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் அரசியல் ரீதியாக, ஆய்வு ரீதியாக, ஊடக ரீதியாக நாம் போராடவேண்டும். நிறுவனமயப்படுத்தப்பட்ட அர




சியல் ஒன்றின் ஊடாகவே நாம் இதனை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லமுடியும். ஆயிரம் சிந்தனை மையங்களும், அபிவிருத்தி நிறுவனங்களும், பண்பாட்டு நிலையங்களும் உலகம் முழுவதிலும் பரந்துவாழும் எம்மக்கள் மத்தியில் மலர வேண்டும். அதேநேரம் அரசியல் நடவடிக்கைகள் தங்கு தடையின்றி உணர்வுடனும் வேகமுடனும் கொண்டு செல்லப்பட வேண்டும்.

கொடிய யுத்தத்தின் பின்னர் நாம் மிகவும் பலவீனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நாம் தொடர்ந்தும் தனிக் கட்சிகளையோ, தனி நபர்களையோ முதன்மைப்படுத்தி சிறு சிறு துண்டுகளாக உடைந்து நின்று எதனையுஞ் சாதிக்க முடியாது. கடந்த காலங்களில் நாம் எல்லோருந்தான் தவறுகள் இழைத்திருக்கின்றோம். எமது கசப்புணர்வுகளையும் நடந்து முடிந்தவற்றை பற்றியும் மீண்டும் மீண்டும் கூறி எம்மை நாமே பலவீனப்படுத்த இடமளிக்க முடியாது. அகத்திலும், சரி புலத்திலும் சரி, சொற்ப எண்ணிக்கையானோரே தமது நேரம், பணம், சக்தி, அதிகாரம் ஆகியவற்றை செலவு செய்து அரசியல் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுவருகின்றார்கள். ஆகவே, நாம் எமக்குள்ளே மீண்டும் மீண்டும் எதிரிகளை உருவாக்கி, எமக்குள்ளேயே தொடர்ந்து மோதிக்கொண்டிருக்க முடியாது.

நெத்தன்யாகு கூறியதைப்போல, தனது இராணுவ வெற்றிக்கு எந்தளவு அரசியல் வெற்றி ஒன்று அவசியம் என்பதை உணர்ந்தே தம்பி பிரபாகரன் கசப்புணர்வுகளை மறந்து தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்று சேர்த்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி இருந்தார். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யுத்தத்தின் பின்னர் தவறான தலைமைகளிடம் சென்று தமிழ் மக்களின் அரசியலைச் சரணாகதி அரசியலாக மாற்றி, ஒரு சிலரின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப செயற்பட்டுவரும் நிலையில், கொள்கை அடிப்படையில் மாற்று அரசியல் அணி ஒன்றின் உருவாக்கத்துக்கு எமது மக்களும் புத்திஜீவிகளும் இன்று அடித்தளம் இட்டுள்ளார்கள்.

அரசியலுக்காக வெற்றுத் தேசியம் பேசிக்கொண்டிருப்பதால் எந்த பயனும் இல்லை. எம் கண்முன்னே இன்று ஏற்பட்டிருக்கும் அபாயங்களை அலட்சியப் படுத்திவிட்டு, எமது மக்களின் பாதுகாப்பை உதாசீனம்செய்துவிட்டு, நாம் அரசியல் செய்ய முடியாது.

இன்று நான் இங்கு பேசிக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் எமது நிலங்கள் அபகரிக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றன. நாம் இழக்கும் எந்த ஓர் அங்குல நிலத்தையும் மீண்டும் பெறுவது என்பது இலகுவான காரியம் அல்ல. அம்பாறையிலும், மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும், முல்லைத்தீவிலும் நாம் நிரந்தரமாக இழந்துபோயுள்ள நிலங்கள் பல்லாயிரம் ஹெக்டேயர்கள் ஆகும். தற்போது நெடுங்கேணி, வவுனியா வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களில் வெற்றிடமாகியுள்ள பிரதேச செயலாளர்கள் பதவி வெற்றிடங்களுக்கு சிங்கள சகோதரர்களை நியமித்து ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்களுக்கு உட்பட்டிருக்கும் அந்தந்தப் பிரதேசங்களை துரிதமாகச் சிங்கள மயமாக்கும் செயற்பாடு ஒன்று திட்டமிடப்படுவதாக அறிகின்றேன். இலங்கையின் ஆதிக் குடிகள் நாங்கள், எம்மை நாமே ஆண்டவர்கள் என்ற அடிப்படையில் எமது தமிழ்த் தேசுய அரசியல் அபிலாகைள் எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்கு அசுர வேகத்தில் எமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனஅழிப்பு நடவடிக்கைகளில் இருந்து எமது இருப்பு, அடையாளம் என்பவற்றை பாதுகாப்பதற்கான தந்திரோபாயமான தடுப்பு அரசியலும் எமக்கு அவசியமாகின்றது.

ஆகவே, நீண்ட கால அடிப்படையிலும் குறுகியகால அடிப்படையிலும் திட்டங்களை வகுத்து நாம் செயற்படவேண்டும். இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டே மிகுந்த நம்பிக்கையுடன் இந்தப் பயணத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். அரசியல் சுக போகங்கள், சலுகைகளுக்காக இந்தக் கூட்டணி துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். அதற்கு ஏற்ற வகையிலேயே பல்வேறு கட்டுப்பாடுகள், இறுக்கங்களை இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்படுத்தி இருக்கின்றோம்.

எழுந்தமானதாக எவையும் இங்கே மேற்கொள்ளப்படவில்லை.திட்டமிடப்பட்ட அடிப்படையிலேயேகூட்டணிக்கான முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அகத்திலும் புலத்திலும் உள்ள மக்களை ஒன்றுபடுத்தி தமிழ் அரசியலை நிறுவனமயப்படுத்தி முன்னெடுத்து செல்வதற்காக 2018 ஒக்டோபர் 24 அன்று எமது உரையில் கூறிய 10 செயற்திட்ட அம்சங்களும் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் எமது செயற்பாடுகள் என்ற பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

இளையோர்கள், பெண்களுக்கான முக்கியத்துவம், பதவி துஷ்பிரயோகம், முறைகேடான சொத்துச் சேர்ப்பு, ஊழல் தடுப்பு ஆகியவை குறித்து இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் கூட்டணியில் வேட்பாளர்களாக நிறுத்தப்படுபவர்கள. இப்புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு செயற்படுவார்கள். புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஏற்ப கூட்டணியின் ஏனைய கட்சிகளும் இவற்றை கடைப்பிடிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

தமிழ் அரசியலை உயர்ந்த ஒரு நிலையை நோக்கிகொண்டுசெல்வதற்காக தேசிய கூட்டணியின் கீழ் எந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரும் தமது சொத்துக்கள் மற்றும் வருமானங்களை வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்னதாக வெளிப்படுத்துவது ஊக்குவிக்கப்படுகின்றது. வேட்பாளர் தெரிவு, பொறுப்புக்கள் மற்றும் பதவிகள் நியமனம் ஆகியவற்றின்போது இந்த விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்று எமது உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல, இந்த நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் வேட்பாளர்கள் தத்தமது மாதாந்த படிகளின. 8 சதவீதத்தினை பொதுமக்களின் நல்வாழ்வு திட்டங்களுக்காக இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அவர்கள் விரும்பிய ஓர் அறக்கட்டளை நிதியத்துக்கு மாதாந்தம் வழங்க வேண்டும். இது பற்றிய அறிவித்தல், விவரங்களுடன் தேசியக் கூட்டணிக்கு வழங்கப்பட வேண்டும். அது எமது தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமாகவும் அமையலாம். அதேவேளை ஆகக்குறைந்தது 2 சதவீதத்தினை தேசிய கூட்டணியின் பொதுவான செலவீனங்களுக்காக வழங்கவேண்டும்.

இளையோர்களையும், புதியவர்களையும் அரசியலுக்குள் உள்வாங்கும் பொருட்டு ஒவ்வொரு தேர்தல்களிலும் ஆகக்குறைந்தது 10சதவீதம் அவர்களுக்காக இடம் ஒதுக்கப்படவேண்டும். இதனை எனது கட்சி உறுதிப்படுத்தும்.

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும் வகையில் தேர்தல்களின் பெண் வேட்பாளர்களை முடிந்தளவு நிறுத்துவதற்கு அங்கத்துவ கட்சிகள் பிரயத்தனம் செய்யவேண்டும். ஆண்: பெண் பிரதிநிதித்துவம் 50:50 என்ற விகிதாசாரத்தில் நாளடைவில் ஏற்படும் வகையில் நாம் முயற்சி எடுப்போம்.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படும் ஒருவர் மீது ஆதாரபூர்வமாக நம்பகத்தன்மையான இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் முறையான விசாரணை நடைபெறும் வரை அவர் தனக்கு வழங்கப்பட்ட நியமன ரீதியான பதவியில் இருந்து தற்காலிகமாக விலகிக்கொள்ளவேண்டும். இதற்கான ஆவணங்களில் கையொப்பம் இட்ட பின்னரே அவர் தமது பதவியை ஏற்றுக்கொள்ளலாம். தேர்தல்களில் வெற்றிபெறுபவர்கள் தமது அதிகாரத்தைத் தமது சொந்த பந்தங்களுக்காக துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. திறமை, தகுதி மற்றும் யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே வேலைவாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.

கூட்டணி அமைத்துள்ள கட்சிகளுடனும் அவற்றின் உறுப்பினர்களுடனும் கடந்த சில வருடங்களாகக் கொள்கை அடிப்படையில் ஏற்கனவே நான் செயற்பட்டு வருகின்றேன். அநேகமானவர்கள் தமிழ் மக்கள் பேரவையிலும் இருக்கின்றார்கள். தமிழ்த் தேசீயக் கூட்டமைப்பில் ஆரம்ப காலம் முதல் செயற்பட்டுவந்த EPRLF கட்சி கொள்கை காரணமாக ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பல வருடங்களாகத் தனியாக செயற்பட்டுவந்திருக்கின்றது. கூட்டமைப்பின் தலைவர்கள் ஜெனிவா சென்று அரசாங்கத்தைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்து கொண்டு துணிச்சலாக எதிர்ப்பு காட்டியவர் சுரேஷ் பிறேமச்சந்திரன். அதேபோல, TELO அமைப்பில் அங்கம் வகித்து கூட்டமைப்பின் செயற்பாடுகளை உள்ளுக்குள் இருந்துகொண்டு எதிர்ப்பு வெளியிட்டு வந்தவர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீகாந்தா மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோர். அவர்களுடன் நான் கடந்த காலங்களில் இணைந்து பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றேன். அதேபோல,திருமதி. அனந்தி சசிதரன் வட மாகாண சபையில் அமைச்சராக என்னுடன் இணைந்து பணியாற்றியுளார். தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அச்சம் இன்றி அவர் வெளியிட்ட கருத்துக்கள் அரசாங்கத்துக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியமையால் தமிழரசு கட்சியில் இருந்து அவர் வெளியேறும் நிலை ஏற்பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் நான் முதலமைச்சராக இருந்தபோது எனது கைகள் கட்டப்பட்ட நிலையிலேயே நான் செயற்படவேண்டிய நிலை இருந்தது. எமது மக்களின் உரிமைகள் பற்றி நான் கதைப்பதையோ அரசாங்கத்தை விமர்சிப்பதையோ கூட்டமைப்பின் தலைமை விரும்பவில்லை. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் பல முட்டுக்கட்டைகளை இட்டது. நான் இப்போது சுயாதீனமாக செயற்படுகிறேன். நான் ஒரு நிறுவனமாகவே செயற்படுகின்றேன். அகத்திலும் புலத்திலும் பல புத்திஜீவிகளும் செயற்பாட்டாளர்களும் எனக்கு ஆதரவு வழங்குகின்றார்கள். முடிந்தளவுக்கு தமிழ் அரசியல் செயற்பாடுகளை நிறுவனமயப்படுத்தி அறிவுபூர்வமான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும். மகாவம்ச புனைகதைகளுக்கு எதிராக தமிழின், தமிழர்களின் உண்மையான வரலாற்றை உரத்து கூறுவதற்கு நாம்அஞ்சத் தேவையில்லை.

பிரித்தானியர்களிடம் இருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாள் முதல் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தில் பல்வேறு வழிகளிலும் தியாகங்களை மேற்கொண்டு தமது உயிர்களை அர்ப்பணித்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மற்றும் போராளிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து, அவர்களின் உயரிய சிந்தனைகளை மனதில் நிறுத்தி, இந்த உரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன். *

# தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விவரம்

**நேற்று உருவான 'தமிழ் மக்கள் தேசிய கூட்டணி'யின் புரிந்துணர்வு உடன்படிக்கை விவரம் வெளியாகியுள்ளது. அது அப்படியே இங்கு பிரசிர மாகின்றது.**

தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் தேசியக்கட்சி, ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் விகரம் கீழே இணைக்கப்பட்டுள்ளது.

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் கூட்டணி இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதற்காக தற்போது விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுரேஷ் பிரேமசந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கட்சியாகும். அக்கட்சி 2001 ஆம் ஆண்டு வேறு கட்சிகளுடன் சேர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்க உதவியது. பின்னர் கொள்கை முரண்பாடு காரணமாக தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகி தற்போது தனியாக செயற்பட்டு வருகின்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (TELO) மூத்த உறுப்பினர்களும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான சட்டத்தரணி திரு.ஸ்ரீகாந்தா மற்றும் திரு.சிவாஜிலிங்கம் ஆகியோர் கொள்கை முரண்பாடு காரணமாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்து பிரிந்து தமிழ் தேசியக்கட்சியை உருவாக்கியுள்ளார்கள். இக்கட்சி இலங்கை



தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளது.

வட மாகாண சபையின் முன்னாள் அமைச்சரான திருமதி.அனந்தி சசிதரன் தமிழரசு கட்சியில் ஏற்பட்ட கொள்கை முரண்பாடு காரணமாக விலகி ஈழ தமிழர் சுயாட்சி கழகம் என்ற கட்சியை உருவாக்கியுள்ளார். இக்கட்சியும் இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவுள்ளது.

மேற்கூறப்பட்ட கட்சிகளின் மூத்த தலைவர்கள் சிலர் 2019 ஆம் ஆண்டு வடக்கு – கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் முன்னெடுப்பில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்துகொண்டு தமிழ் மக்களின் 13 அம்ச கோரிக்கைகளை உருவாக்க உதவி செய்தனர். கொள்கை அளவிலும் செயற்பாட்டிலும் அவர்கள் அக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

அதேவேளை, இந்த 4 கட்சிகளையுஞ் சேர்ந்தவர்கள் கடந்த காலத்தில் கொள்கை ரீதியாக பல்வேறு அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்திருந்தனர்.

இவற்றின் பின்னணியில், இலங்கையின் 16 ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் மிக விரைவில் நடத்தப்படவிருக்கின்ற நிலையில் மேற்குறிப்பிட்ட 4 கட்சிகளும் கொள்கை அடிப்படையில் கூட்டணி ஒன்றை அமைத்து செயற்படுவதற்கு இணங்கியுள்ளன.

இவற்றுள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தவிர ஏனையவை இலங்கை தேர்தல்கள் திணைக்களத்தினால் இன்னமும் பதிவு செய்யப்படவில்லை என்பதால் மேற்குறிப்பிட்ட கட்சிகளான தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஈழத் தமிழர் சுயாட்சிக்கழகம் ஆகியன ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பதிவைத் தற்காலிகமாக மாற்றி புதிய கூட்டணி ஒன்றின் அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கு முன்வந்துள்ளன. இங்கு குறிப்பிடப்படும் பதிவு செய்யப்



படாத கட்சிகள் பதிவு செய்யப்படும் பட்சத்தில் தேவை ஏற்பட்டால் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை எத்தருணத்திலேனும் புதிதாகத் தயாரித்து கைச்சாத்திடப்படும்.

### 1. இணக்கம்

புதிய கூட்டணி தமிழ் மக்கள் தேசிய கூட்டணி என்று அழைக்கப்படும்.

தனது கட்சியின் பதிவின் நலன்களை புதிய கூட்டணியான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி (TMTK) சார்பில் பாவிப்பதற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இணங்கியுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட அங்கத்துவக் கட்சிகளின் இடையே கொள்கை அடிப்படையில் பின்வரும் விதிகளுக்கு அமைய இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்றது –

இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கம் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளும் மேற்குறிப்பிட்ட 4 கட்சிகளுடன் ஏனைய கட்சிகளும் இந்த கூட்டணியில் உள்வாங்கப்படலாம். இதேவேளை, இந்த கூட்டணியில் அங்கம்வகிக்கும் கட்சிகள் பொதுமக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளை தமது கட்சிகளுக்கு ஊடாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்குள் உள்வாங்கி கூட்டுக் கட்சிகளின் சம்மதத்துடன் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தலாம்.

இந்தக் கூட்டணியின் தலைவராக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் செயற்படுவார். செயலாளராக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஒருவர் செயற்படுவார்.

### 2. நோக்கம்

சட்டப்படி தமிழ் மக்கள் ஒரு தேசம் (Nation), இலங்கையின் வடக்கு கிழக்கு அவர்களின் மரபுவழி தாயகம் (Traditional Homeland), அவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் (Right of Self Determination) என்று தமிழ் மக்கள் 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வழங்கிய ஆணையை ஏற்று, மற்றும் பூகோள அரசியல் மாற்றங்களுக்கு அமைவாக சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தி, இறுதியாக 2012ல் கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் 2013ல் வடக்கு மாகாண சபை தேர்தலிலும் தமிழ் மக்கள் மீண்டும் வழங்கிய ஆணை ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கைத் தீவினுள் தமிழர்களின் மரபுவழி தாயகமான இணைந்த வடக்கு கிழக்கில் இறைமையுடனான உயர்ந்த



மட்ட சுயாட்சியை சமஷ்டி அடிப்படையில் பெறுவதற்கும் அவர்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு மேம்பாட்டுக்குமாக அனைத்து ஜனநாயக வழிகளையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்துவதற்கான பலமான கூட்டணியை உருவாக்குதல்.

### 3. பெயர்

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் அங்கத்துவக் கட்சிகள் சேர்ந்து இந்தக் கூட்டணியை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற பெயரில் இயக்க வேண்டும் என்றும் (இதன் பின்னர் இக் கூட்டணி தேசியக் கூட்டணி என்று அழைக்கப்படும்), அதன் சின்னம், கொடி, கூட்டணிப்பாடல் போன்றவற்றை அங்கத்துவக் கட்சிகள் விரைவில் தீர்மானிக்க வேண்டும் என்றும் இத்தால் இணங்குகின்றனர்.

### 4. செயற்பாடுகள்

அங்கத்துவக் கட்சிகளின் மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள், முன் கோபதாபங்கள், குரோதங்கள், விரோதங்கள் எல்லாவற்றையும் களைந்துவிட்டு அகத்திலும் புலத்திலும் உள்ள அனைவரையும் அரவணைத்து அரசியல், ஜனநாயக மற்றும் ராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

அங்கத்துவக் கட்சிகளின் மேற்குறிப்பிட்டுள்ள தீர்வுக் கோரிக்கையை அக்கறையுடனும் இதய சுத்தியுடனும் பரிசீலிக்கும் எந்த அரசுடனும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு தீர்வை அடையப் பாடுபடுதல்.

அரசாங்கத்துடன் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் பொருட்டு உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்தின் ஊடாகவும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு குறுக்கு வழிகளை கையாளாமல், போர்க் குற்ற விசாரணைகள் மூலம் இன அழிப்பு உண்மை



களை எமது சிங்களச் சகோதரர்களுக்குத் தெரியப்படுத்தி, பரஸ்பர அவநம்பிக்கைகள் மற்றும் அச்சங்களை நீக்கி, நிலையான சமாதானம் ஏற்பட சகல ஜனநாயக வழிகளையும் பயன்படுத்துதல். இதற்காக சிங்கள புத்திஜீவிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சமூக மற்றும் மதத் தலைவர்கள் மற்றும் ஊடகங்களுடன் நெருக்கமாகச் செயற்படுதல்.

நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக அகத்திலும் புலத்திலும் உள்ள புத்திஜீவிகளை உள்வாங்கி மூலோபாய கொள்கை வகுக்கும் கட்டமைப்பு (Think Tank) ஒன்றை உருவாக்குதல். இந்தக் கட்டமைப்பு தேசியக் கூட்டணியின் கொள்கை வகுத்தல் மற்றும் அரசியல் இராஜதந்திர செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைகளை மற்றும் பரிந்துரைகளை வழங்கும். இந்த கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படுபவர்கள் எவ்வகையிலும் கட்சி அரசியலுக்குள் தலையிட முடியாதவர்களாகவும் எந்தகட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தாதவர்களாகவும் இருப்பர்.

அரசியலையும் அபிவிருத்தியையும் சம அளவில் சமாந்திரமாக கொண்டு செல்லும் நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதேவேளை தமிழர்களின் தொன்மையான வரலாறு, தமிழ் மொழியின் சிறப்பு மற்றும் பண்பாட்டுச் செழுமை ஆகியவற்றைப் பாதுகாத்து மேலும் மேன்மைப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல்.

புலம்பெயர் மக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உலகநாடுகளின் உதவியுடன் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சுயசார்பு பொருளாதார செயற்றிட்டங்களை ஏற்படுத்தி மீண்டும் அவர்களுக்கு வளமான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்த பொருத்தமான ஒரு பொறிமுறையை அல்லது வழியை ஏற்படுத்துதல்.

சிறையில் வாடும் தமிழ் அரசியல்க் கைதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர், முன்னாள் போராளிகள், பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள், ஆதரவற்ற குடும்பங்கள் ஆகியோரின் பிரச்சினைகள் தொடர்பிலும் மற்றும் நில ஆக்கிரமிப்பு, சிங்களக் குடியேற்றம், பௌத்த மத சின்னங்களைத் திணித்தல், பிறழ்வான வரலாறுகளைத் திணித்தல் ஆகியவை தொடர்பிலும் சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் உதவிகளுடனும் அரசாங்கத்துடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமும் தீர்வுகாணும் நடவடிக்கைகளை எடுத்தல்.

(15 ஆம் பக்கம் பார்க்க...)

# தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இறுதியுத்தத்தில் நடைபெற்றது இன அழிப்புத்தான் என்று வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வலுப்படுத்த மேலும் ஆய்வுகளைச் செய்தும் தரவுகளைத் திரட்டியும் சர்வதேச ரீதியாக அதனை ஏற்றுக்கொள்ளச்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

உலகம் முழுவதிலும் வாழ்கின்ற தமிழ் மக்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி எம் மக்களுக்கு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாக வும் பலமான ஒரு ஆதரவு சக்தியை உருவாக்குதல்.

## 5. கட்சிகளின் கடப்பாடுகள்

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயற்பாடுகளுக்கு அங்கத்துவக் கட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தும், கூட்டாகவும் பொறுப்பாக இருப்பன.

தமக்கிடையில் எழும் பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல்கள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

தேசியக் கூட்டணி தொடர்பாக அல்லது முக்கிய விடயங்கள், தீர்மானங்கள் தொடர்பாக உறுப்பினர் ஒருவர் தன்னிச்சையாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க முடியாது. தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் அல்லது தலைவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் மட்டுமே கருத்துத் தெரிவிக்க முடியும். எவரேனும் ஒரு கட்சி அங்கத்தவர் தமது சொந்தக் கருத்துக்களை வெளியிடும் போது அது சொந்தக் கருத்தென்றும் கூட்டுக் கட்சியான தேசியக் கூட்டணியின் கருத்து அங்கீகரிக்கப்பட்ட உரிய நபரால் பின்னர் வெளியிடப்படும் என்றும் கூறலாம். ஆனால் அக்கருத்துக்கள் தேசியக் கூட்டணி யின் ஒருமைப்பாட்டையோ ஒத்தகருத்துக்களையோ பாதிப்பதாயின் அவர் மேல் தேசியக் கூட்டணி உரிய நடவடிக்கை எடுக்கும்.

கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமது வேட்பாளர்கள் சம்பந்தமான செலவுகளைப் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும். சேர்ந்து நடாத்தப்படும் அரசியல் கூட்டங்களுக்கான செலவுகளை யாப்பு ஒன்று உருவாகும் வரையில் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களே வரையறுத்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அங்கத்துவக் கட்சிகளின் உத்தியோகபூர்வ கணக்காளர்கள் இவை பற்றி ஆராய்ந்து கட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்குவார்கள்.

## 6. நிர்வாகச் செயன்முறை

தேசியக் கூட்டணியின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை நெறிப்படுத்தும் வகையில் யாப்பு ஒன்று உருவாக்கப்படும். அது அநேகமாக விரைவில் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிந்த பின்னரே சாத்தியமாகும் என்பது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அதுவரையில் தேசியக் கூட்டணியின் முகாமைத்துவ, நிர்வாக செயற்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை அரசியல் பீடம் (உபபிரிவு 6.4ஐப் பார்க்கவும்) முடிவெடுக்கும்.

தேசியக் கூட்டணியின் ஒழுக்கம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதற்காக ஒழுக்கக் கோவையொன்று விரைவில் தயாரிக்கப்பட வேண்டும். அதுவரையில் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களே ஒழுக்கத்தை வரையறுத்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமது தனித்துவத்தைப் பேணுவது அங்கத்துவக் கட்சி உறுப்பினர்களின் சுதந்திரம் என்றாலும், கூட்டு முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு செயற்படவேண்டும்.

தேர்தல் நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளையும் இந்த தேசியக் கூட்டணியால் உருவாக்கப்படும் 11 அங்கத்தவர்களைக் கொண்ட அரசியல் பீடம் (Politbureau) தீர்மானிக்கும். தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய கட்சி, ஈழத் தமிழர் சுயாட்சிக்கழகம் ஆகியவற்றுக்கிடையில் தலைவருக்கு மேலதிகமாக தமிழ் மக்கள் கூட்டணி 50% ,மற்றையவை அனைத்தும் 50% என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் அரசியல் பீடத்தின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

தேசியக் கூட்டணியின் கொள்கையை ஏற்றுக் கொள்ளும் வேறு கட்சிகளை உள்வாங்க தேசியக் கூட்டணி முடிவெடுத்தால் மேற்கண்ட கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் மாற்றம் செய்யப்பட்டு பங்காளி கட்சிகளுக்கு இடையே பகிரப்படலாம் அல்லது விட்டுக்கொடுப்பு செய்யப்படலாம்.

சகல முடிவுகளும் ஏகமனதாக அல்லது பெரும்பான்மை முடிவுகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும். அரசியல்பீட அங்கத்தவர்கள் ஏதேனும் விடயத்தில் சமமாகப் பிரிந்திருந்தால் அரசியல்பீட தலைவர் தமது தீர்மானிக்கும் வாக்கை (Casting Vote) பாவிப்பார்.

தேசியக் கூட்டணியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக மூலோபாய கொள்கை வகுக்குங் கட்டமைப்பையும் மற்றும் விசே தேவைகளுக்காக உப குழுக்களையும் அரசியல் பீடம் உருவாக்கலாம். முக்கியமாக கலை பண்பாட்டுக்கான உப குழு, பால் சமத்துவத்துக்கான உப குழு, சமூக சமத்துவத்துக்கான உப குழு போன்றன தேசியக் கட்டமைப்புகளுக்கான உப குழுக்களுள் அடங்குவன. இவற்றுடன் சிறுவர் முதியோர் நலச்சேவை, முன்னாள் போராளிகளுக்கான நலச்சேவை, மாற்றுத் திறனாளிகளுக்கான நலச்சேவை போன்ற நலச்சேவைகளுக்கான உபகுழுக்கள் போன்றனவும் உருவாக்கப்படலாம். உப குழுக்களில் கட்சிகளுக்கும் சிவில் அமைப்புகளுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படும். அரசியல் பீடத்தின் வழிநடத்தலின் கீழ் இவ்வுபகுழுக்கள் இயங்குவன.

தேசியக் கூட்டணியின் அரசியல் பீடம் குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை கூடி நடைமுறை விடயங்களை ஆராயும்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் மூலோபாய கொள்கைவகுக்கும் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும் வரை தற்காலிகமாக மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள், படைப்பாளிகள் அடங்கிய ஓர் ஆலோசகர் குழு அரசியல் பீடத்தினால் உருவாக்கப்படும்.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை அரசியல் பீடமே கையாளும். இதன் போது கொள்கைவகுக்கும் கட்டமைப்பு, ஆலோசனை சபையின் பரிந்துரைகளையும் கவனத்தில் எடுத்து தேர்தல் விஞ்ஞாபனம், தேர்தல் உபாயம் மற்றும் வேட்பாளர் நியமனம் ஆகியவை தொடர்பிலான முடிவுகளை அரசியல் பீடம் மேற்கொள்ளும்.

அரசியல் பீடத்தில் கட்சிகளுக்கு பிரிவு 6.4 இல் வழங்கப்பட்டுள்ள விகிதாசார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலேயே ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுக்குமான வேட்பாளர்கள் நியமனம் அமையும். இதன்படி, யாழ் – கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் 10 வேட்பாளர்களும் தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியகட்சி, ஈழத் தமிழர் சுயாட்சிக்கழகம் ஆகியவற்றுக்கிடையில் 5:2:2:1 என்ற எண்ணிக்கையில் போட்டியிடுவர். தமிழ் மக்கள் கூட்டணி நலஉரித்துக்கள் சார்ந்த இரு வேட்பாளர்களைத் தமக்கென ஒதுக் கப்பட்ட வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கலாம். எனினும் மற்றைய தேர்தல் மாவட்டங்களில் நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாற்றங்கள் இயற்றப்படலாம். தேர்தல் தேவைகளிற்கேற்ப அங்கத்துவக் கட்சிகள் தமது எண்ணிக்கையில் மாற்றஞ் செய்யலாம்.

தேசியக் கூட்டணியின் தலைவரே நாடாளுமன்றக் குழுவின் தலைவராகவும் செயற்படுவார். தேசியக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற குழுவின் தலைவராக செயற்பட முடியாத சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் பாராளுமன்ற குழுவின் தலைவர் பதவி அரசியல் பீடத்தினால் தீர்மானிக்கப்படும்.

தேசியபட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் பொருத்தமானவர்களை நியமிக்கும் அதிகாரத்தை அரசியல்பீடம் கொண்டிருக்கும். சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப தேசியபட்டியல் ஊடாக நியமனம் பெறுபவர் எத்தனை ஆண்டுகளுக்கு பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கலாம் என்பதையும் அரசியல் பீடம் தீர்மானிக்கும். இது தொடர்பிலான முடிவு ஒருவரின் நியமனம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாகவே தீர்மானிக்கப்பட வேண்டும்.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் ஏற்படுத்தப்படும் கூட்டணியின் பெயர், சின்னம், அரசியல் பீட உறுப்பினர்களின் பெயர் விபரங்கள், மற்றும் தேவையான விபரங்கள் ஆகியவை உள்ளிட்ட பதிவு ஒன்று அனைத்து பங்காளிக் கட்சிகளின் செயலாளர்களின் ஒப்பங்களுடனும் தேர்தல் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அங்கத்தவர்கள் அந்தந்தக் கட்சிகளின் ஒப்புதலின்றி கூட்டணியில் உள்ள ஏனைய கட்சிகளுடனோ அல்லது வேறு ஏதும் கட்சிகளுடனோ இணைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். அங்கத்துவ கட்சிகள் அவர்களை ஏற்கவுங் கூடாது. அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் அந்தந்தக் கட்சியின் அல்லது அமைப்பின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பதுடன் தேசியக் கூட்டணியின் விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டுச் செயற்படவேண்டும்.

தேர்தல் சம்பந்தமான தேசியக் கூட்டணியின் தீர்மானங்கள் அனைத்தும் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் செயலாளர் அல்லது அவர் சார்பில் தேர்தல் திணைக்களத்துடன் தொடர்பு கொள்பவரால் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். தேசியக் கூட்டணி தேர்ந்தெடுக்கும் நபர்களின் பெயர்களே முறையாக தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

தனது கட்சியின் பதிவின் நலன்களை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வரும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவடையும் வரை புதிய கூட்டணியான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கு நல்கும்.

அதன்பின்னர் குறித்த பதிவை நான்கு கட்சிகள் சேர்ந்த புதிய கூட்டணிக்கு வழங்கி தமது கட்சியின் பெயரை வேறு பெயராக மாற்ற வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் கூட்டணியின் பதிவின் போது அப் பெயரை பதிவு செய்வதற்கு எந்தவிதத்திலும் தடையாக இருக்கக்கூடாது.

## 7. பொதுவானதும் முக்கியமானதும்

தமிழ் அரசியலை உயர்ந்த ஒரு நிலையை நோக்கி கொண்டு செல்வதற்காக தேசிய கூட்டணியின் கீழ் எந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரும் தமது சொத்துக்கள் மற்றும் வருமானங்களை வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்னதாக வெளிப்படுத்துவது ஊக்குவிக்கப்படுகின்றது. வேட்பாளர் தெரிவு, பொறுப்புக்கள் மற்றும் பதவிகள் நியமனம் ஆகியவற்றின்போது இந்த விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

இந்தத் தேசியக் கூட்டணி ஊடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவாகும் வேட்பாளர்கள் தமது மாதாந்த படிகளின் 8 சதவீதத்தினை பொதுமக்களின் நல்வாழ்வு திட்டங்களுக்காக இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட, அவர்கள் விரும்பிய ஒரு அறக்கட்டளை நிதியத்துக்கு மாதாந்தம் வழங்க வேண்டும். இது பற்றிய அறிவித்தல், விபரங்களுடன் தேசியக் கூட்டணிக்கு வழங்கப்பட வேண்டும். அது தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமாகவும் அமையலாம். அதேவேளை, ஆகக்குறைந்தது 2 சதவீதத்தினை தேசிய கூட்டணியின் பொதுவான செலவீனங்களுக்காக வழங்கவேண்டும்.

இளையோர்களையும் புதியவர்களையும் அரசியலுக்குள் உள்வாங்கும் பொருட்டு ஒவ்வொரு தேர்தல்களிலும் ஆகக்குறைந்தது 10 வீதம் அவர்களுக்காக இடம் ஒதுக்கப்படவேண்டும். இதனை உறுதிப்படுத்தும் பொறுப்பு தேசியக் கூட்டணி கட்சிகளுக்கு இருக்கிறது.

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும் வகையில் தேர்தல்களில் பெண் வேட்பாளர்களை முடிந்தளவு நிறுத்துவதற்கு அங்கத்துவ கட்சிகள் பிரயத்தனம் செய்யவேண்டும். தேசியக் கூட்டணியின் ஆண்: பெண் பிரதிநிதித்துவம் 50:50 என்ற விகிதாசாரத்தில் நாளடைவில் ஏற்படும் வகையில் அங்கத்துவக் கட்சிகள் முயற்சி எடுக்க வேண்டும்.

இந்த தேசியக் கூட்டணியின் கீழ் நாடாளுமன்றத்துக்கு அல்லது ஏனைய பொறுப்பான பதவிகளுக்கு தெரிவுசெய்யப்படும் ஒருவர் மீது ஆதாரபூர்வமாக நம்பகத்தன்மையான இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் முறையான விசாரணை நடைபெறும் வரை அவர் தனக்கு வழங்கப்பட்ட நியமன ரீதியான பதவியில் இருந்து தற்காலிகமாக விலகிக்கொள்ளவேண்டும். இதற்கான ஆவணங்களில் கையொப்பம் இட்ட பின்னரே அவர் தமது பதவியை ஏற்றுக்கொள்ளலாம்.

தேர்தல்களில் வெற்றிபெறுபவர்கள் தமது அதிகாரத்தை தமது சொந்த பந்தங்களுக்காக துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. திறமை, தகுதி மற்றும் யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே வேலைவாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.

தேசியக் கூட்டணியில் உள்ள கட்சிகளும் அதன் அங்கத்தவர்களும் இந்தக் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள நிபந்தனைகளுக்கு அல்லது ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். மீறும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவோ அல்லது இந்தக் தேசியக் கூட்டணியை வலுவற்றதாக்கவோ கூட்டுக் கட்சிகளுக்கு அதிகாரம் உண்டு.

மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளை ஏற்று தரப்பார் சார்பில் 2020 பெப்ரவரி மாதம் ஒன்பதாம் திகதி ஆகிய இன்றைய தினத்தில் பின் குறிப்பிடப்பட்டவர்களால் கையெழுத்திடப்படுகிறது.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் திகதி**
**செயலாளர் நாயகம்,**
**தமிழ் மக்கள் கூட்டணி.**

**திரு.க.பிரேமச்சந்திரன் செயலாளர்**
**தலைவர், ஈழ மக்கள் புரட்சிகர**
**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.**

**திரு.என்.சிறிகாந்தா**
**தலைவர், தமிழ் தேசிய கட்சி**

**திருமதி.அனந்தி சசிதரன்**
**செயலாளர் நாயகம்,**
**ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம்**

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் பற்றிய இந்திய எச்சரிக்கை மைத்திரிக்கும் ரணிலுக்கும் நேரத்துடனேயே தெரியுமாம்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவில் அதிரடித் தகவல் மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டு விட்டனவா

புதுடில்லி,பெப்.10

இந்தியா – இலங்கை இடையேயான உறவை மேலும் வலுவடையச்செய்துள்ளதாக இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று பிரதமர் மோடியை சந்தித்து பேசினார்.

பின்னர் செய்தியாளர்கள் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு: –

கேள்வி:– நீங்கள் டெல்லிக்கு பயணமாக வந்திருப்பதையும், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசியதையும் எப்படி பார்க்கிறீர்கள்?

பதில்:– என்னுடைய டெல்லி பயணம் சிறப்பு வாய்ந்ததாகும். இது நவம்பர் மாதத்தில் என்னுடைய சகோதரரும், இலங்கை ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ சந்திப்பின்போது 2 நாடுகளுக்கும் இடையே உள்ள நல்லுறவுக்காக போடப்பட்ட அஸ்திவாரம். இப்போது மேலும் வலுவடைந்துள்ளது.

பிரதமர் உடனான சந்திப்பு மிகவும் பயன் உள்ள சந்திப்பாக அமைந்தது. அவர் என்னிடம் மிகவும் நெருக்கமான நட்பை காட்டினார். நான் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டபோது கார் வரை வந்து வழியனுப்பி வைத்தார். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான உறவு மேலும் வலுவடைந்துள்ளது. இரு நாடுகளுக்கு இடையே இருந்த வேற்றுமைகள் களையப்பட்டு விட்டன. நல்ல புரிந்துணர்வு மற்றும் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயுள்ள கூட்டுறவு, பிராந்திய பொருளாதார வளர்ச்சி மற்றும் பயங்கரவாதத்தை ஒடுக்குவதிலும் இரு நாடுகளும் நல்ல பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.



கேள்வி: – இலங்கையில் ஈஸ்டர் தினத்தன்று நடந்த வெடிகுண்டு நாச வேலை பற்றி இந்தியா முன்கூட்டியே ஏற்கனவே எச்சரிக்கை விடுத்தும் நடந்துவிட்டதே? அப்போது ஜனாதிபதியாக இருந்த சிறிசேன தனக்கு அந்தத் தகவல் சொல்லப்படவில்லை என்று கூறியிருந்தாரே?.

பதில்: – சிறிசேனவுக்கு இந்தியா அனுப்பிய எச்சரிக்கை தகவல் நன்றாகத் தெரியும். தகவல்கள் அனைத்தும் அவருக்கு சொல்லப்பட்டன. அப்போது, பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவுக்கும் தெரியும். ஆனாலும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இனிமேல் இதுபோன்ற தவறு என் ஆட்சியில் நடக்காது. என்னுடைய கடந்த அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒடுக்கியது. அப்போது ஏற்படுத்திய பயங்கரவாதத்துக்கு எதிரான கட்டமைப்பை சிறிசேன, ரனில் விக்ரமசிங்கே ஆட்சி தகர்த்துவிட்டது. அதுமட்டுமல்ல, பயங்கரவாதத்தை தடுக்க நடவடிக்கை எடுத்த 70 உளவுத்துறை அதிகாரிகளில் சிலர் பணியில் இருந்து நீக்கப்பட்டனர். பலர் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். சிலர் வேறு நாடுகளுக்கு சிறுசிறு பணியிடங்களுக்கு மாற்றப்பட்டு வெளியே அனுப்பப்பட்டனர்.

இப்போதுள்ள சூழ்நிலையில் பயங்கரவாதம் என்பது எல்லா நாடுகளுக்கும் சவாலாக உள்ளது. முக்கியமாக இந்தியா, இலங்கை நாடுகளுக்கு இருக்கிறது. ஏனென்றால், இருநாடுகளும் பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளன. ஈஸ்டர் வெடிகுண்டு தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டவர், இலங்கையின் பெரிய பணக்காரர்களில் ஒருவர். அவருடைய 2 மகன்கள் தற்கொலை படையாக செயல்பட்டார்கள். அவர்களில் ஒருவர் இங்கிலாந்திலும், மற்றொருவர் ஆஸ்திரேலியாவிலும் உயர் படிப்பு படித்தவர்.

கேள்வி: – இந்தியா – இலங்கை உறவு வலுவடைந்து வந்ததாகச் சொன்னீர்கள். நீண்ட காலமாகவே இந்தியாவுக்கு, நீங்கள் சீனாவோடு மிக நெருக்கமாக உறவு வைத்திருக்கிறீர்கள் என்ற கவலை இருக்கிறதே.

பதில்:– எதற்காக இந்தியா அஞ்ச வேண்டும்? இந்தியா பெரிய வலுவான நாடு. அதனால், இந்த கவலை தேவையில்லை.

கேள்வி:– 13 ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி உங்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறாரே?

பதில்:–13 ஆவது அரசியல் சட்ட திருத்தம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. உண்மை என்னவென்றால், அந்த சட்டத்தை மாகாணசபை சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. உதாரணமாக சொல்ல வேண்டும் என்றால், வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் விக்னேஸ்வரன், அந்த மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாக செலவழிக்காமல் திருப்பிக் கொடுத்துவிட்டார்.– என்றார்

இந்த பேட்டியின்போது, இலங்கை அரசின் கடற்றொழிலமைச்சர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உடன் இருந்தார்.

## வடக்குக்கு நிதி வரவில்லை என ஆளுநர் கவலை நிதி திருப்பி அனுப்பப்பட்டது என்கின்றார் பிரதமர்

யாழ்ப்பாணம்,பெப்.10

வடமாகாணத்திற்கான அதிகாரத்தை வழங்கிவிட்டதாக இலங்கை பிரதமர் இந்தியாவில் தெரிவித்துள்ளமையுடன் முன்னாள் வடக்கு முதலமைச்சர் அபிவிருத்திக்கு வழங்கிய நிதியை திருப்பியனுப்பி விட்டார் எனவும் விளக்கமளித்துள்ளார்.

இந்நிலையில் ஆயிரத்து இருபத்தேழு மில்லியன் ரூபா நிதியை அரசு ஜனவரி தாண்டியும் விடுவிக்கவில்லையென வடக்கு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வரையாக முன்னெடுக்கப்பட்ட பெருமளவு வேலைகளிற்கான கொடுப்பனவுகளை இன்னமும் வழங்கமுடியாதிருப்பதாகவும், மத்திய திறைசேரி நிதியை விடுவிக்காது திண்டாடி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையிலேயே வழமை போலவே ஏனைய தரப்புக்கள் போல பிரதமர் மஹிந்தவும் இம்முறை விளக்கமளித்துள்ளார் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனிடையே யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 880 மில்லியன் ரூபா வேலைத்திட்டத்துக்கான பணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஏன் என்றால் அதற்கான ஒதிக்கீடு இல்லையென இன்னொரு விளக்கத்தை அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான அங்கயன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கம்பரெலியா என்று கிராமம் கிராமமாகக் கூறியவர்கள் இன்று அவர்களுடைய பணத்தையும் நாங்கள் பெற்றுக் கொடுக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது என்று தமிழ்க் கூட்டமைப்பினரை அவர் வைதுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## லெப்டினன்ட் கேர்ணல் உட்பட 5 இராணுவத்தினர் உள்ளடங்கலாக 21 பேர் கிளிநொச்சியில் கைது!

### புலிகளின் பொருள்களைத் தேடும் சாக்கில் புதையல் தோண்டினராம்

கிளிநொச்சி,பெப்.10

கிளிநொச்சியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 5 இராணுவத்தினர் உட்பட 21பேர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இராணுவத்தினரில் லெப்டினன்ட் கேர்ணல் தர அதிகாரி ஒருவரும் உள்ளடங்குகின்றார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி – தரும்புரம், இராமநாதபுரத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டவை எனக் கூறப்படும் பொருள்களைத் தேடுவதாகக் கூறி இவர்கள் அதிநவீன ஸ்கனர் கருவிகளைப் பயன்படுத்தி புதையல் தோண்டுகின்றனர் என விசேட அதிரடிப்படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து விசேட அதிரடிப் படையினரின் அணி ஒன்று முன்னெடுத்த தேடுதலில் 21 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் லெப்டினப்ட் கேணல் தர அதிகாரி உள்ளிட்ட 5 இராணுவத்தினரும் அடங்குகின்றனர்.

சந்தேக நபர்கள் அனைவரும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் அவர்களிடம் கைப்பற்றப்பட்ட அதிநவீன ஸ்கனர் கருவிகளுடன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள தரும்புரம் பொலிஸார், சந்தேகநபர்களை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.02.2020 இல் வெளியிடப்பெற்றது.